
தமிழரசு
16-1-1992 ரூ 1


கோபன்




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

தைத் திங்கள் – 2

மலர்: 22 இதழ்: 14

16-1-1992




# இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| எது உண்மை இலக்கியம்? —தந்தை பெரியார் | ... | 2 |
| உழவர் திருநாள் —பேரறிஞர் அண்ணா | ... | 3 |
| உழைப்போம்! உயர்வோம்! —டாக்டர் எம்.ஜி.ஆர். | ... | 5 |
| வான்புகழ் வள்ளுவருக்கு வாழ்த்து மாலை | ... | 13 |
| புகழ்பாடு தை மகளே! (கவிதை) | ... | 14 |
| பொன்னிக்குப் பொங்கல் வாழ்த்து | ... | 17 |
| இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு | ... | 19 |
| சென்னைப் பல்கலைக் கழகம் அன்றும் இன்றும் | ... | 23 |
| பொற்காலம் | ... | 24 |
| இறந்தோரை அடையாளம் காணும் ஒரு புதிய முறை | ... | 29 |
| பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை | ... | 31 |
| 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-1992 | ... | 33 |
| தமிழ்நாட்டில் முழு அடைப்பு வெற்றி | ... | 37 |
| இன்பம் தழைத்திடுக! (கவிதை) | ... | 41 |
| சங்கப் புலவர் நினைவாக நினைவுத் தூண் | ... | 43 |
| உறுதி பிறந்தது! (கவிதை) | ... | 45 |
| தனிச் சிறப்பு வாய்ந்த நடுகல் | ... | 48 |






# எது உண்மை இலக்கியம்?

**- தந்தை பெரியார்**



மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியதும் அறிவையும், திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக்கூடியதும் ஆகிய சிறந்த் கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்வதே உண்மையான தமிழ் உணர்ச்சியாகும்.

மனித சமுதாயத்திற்கே நல் வழிகாட்டி, நன்னெறியூட்டி, நற் பண்புகளையும், ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவேதான் எல்லா மக்களும் எல்லா மதத்தவரும் ''எங்கள் குறள்'' ''எங்கள் மதக் கருத்தை ஒப்புக் கொள்ளும் குறள்'' என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

குறள் வெறும் ஒழுக்கத்தையும், நல்வாழ்க்கைக்கு வேண்டிய அனுபவப்பூர்வமான பிரத்தியட்ச வழியையும் கொண்டதாகும். குறள் ஓர் அறிவுக் களஞ்சியம், பகுத்தறிவு மணிகளால் கோக்கப்பட்ட நூல்.

நல்ல தமிழில் - இயற்கை எழில்களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும், மானமிக்க சமத்துவ வாழ்வினையும், வரலாற்றினையும், நேர்மையையும், நீதிநெறிகளையும், தமிழ்நாட்டுப் பற்றையும், மொழியின் ஆர்வத்தையும், ஒற்றுமைகளையும், கட்டுப்பாட்டையும் எடுத்துக் காட்டும் பாட்டுக்களையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

இலக்கியம் எதற்காக? இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்க வேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால், மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மட்டும் அல்லாமல் மனித சமுதாய வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் அது இருக்கவேண்டும் என்பது எனது கருத்து.

# உழவர் திருநாள்



## பேரறிஞர் அண்ணா

இன்று திருநாள்!

இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இருபாலரும், 'பொங்கலோ பொங்க'லென்று மகிழ்ச்சியுடன் குரலெழுப்பி, தாமும், தம்மைச் சூழ இருப்பவரை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, 'நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத்திடும்' என்று நம்பி, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன் மற்றையோரும், மனைதோறும் மனைதோறும் இருத்தல் கண்டு, நாடே விழாக்கோலம் பூண்டுள்ளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழாநாள்!

'பால் பொங்கிற்றா?- என்று, அன்பு பொங்கக்கேட்டு அகமகிழச் செய்யும் நன்னாள்! இன்பம் பொங்கும்! மனையெல்லாம் வழியும்! புத்தம் புதுக்கோலம் பெற்று, இல்லமெல்லாம் எழிலோவியமாகும்; அன்பு மணம் எங்கும் கமழும்; பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் 'கானம்' கிளப்பிடுவது போன்றதோர் களிப்பொலி எங்கும் எழும்! பனி தொலைந்தது; பரிதி அப்பகையினை விரட்டினான் நில மடந்தைக்குப் புதிய எழிலூட்டினான்- நடுக்கும் குளிர் இனி இல்லை; வாழ்வை நொறுக்கும் கேடுகட்கு இனி ஆதிக்கம் இல்லை!

விளைந்தது குவிந்திடக் கண்டோம்; வினையின் பயனைக் கொண்டோம்; செயலின் செழுமை விளங்கிற்று; செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று; உழவன் பெருமையை உலகே புகழ்கிறது; உலகுக்கே அத்தொழில் அச்சாணி என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

அவன் காலில் படிந்த 'சேறும் சகதியும்' வாழ்வுக்குச் சந்தனமாகி மணம் அளிக்கிறது. அவன் பூட்டிய ஏர் அளித்த வளம், பெருந்தேரோடும் நிலையை அரசர்க்கே அளிக்கிறது எனில், மற்றையோர் ஏற்றம் பெறாதிருப்பரோ! அவன் 'கஞ்சி' தான் குடித்தான்; கலயமோ மண்ணாலானது; கழனிப் பக்கம் அமர்ந்து கடும் உழைப்புக்குப் பிறகு, உச்சிப்



போதிலே அவன் 'இச்சைக்கினியாள்' தந்தது.

இதோ, அவன் இஞ்சியும், மஞ்சளும், வாழையும், பலாவும், மாவும் பிறவும் அளித்து, தன் திறமையையும், வள்ளற்றன்மையையும் எடுத்துக் காட்டுகிறான். கல்லிலும், முள்ளிலும் நடந்தான் - காரிருள் கலையும் நேரமறிந்து எழுந்தான் - பகலெலாம் பாடுபட்டான் - முளைவிட்டதும் மகிழ்ந்தான் - களை கண்டு கவலை கொண்டான்; உழைத்தான், உழைத்தான் - கழனி பச்சை நிறம் பெற்றது; மீண்டும் பாடுபட்டான்; இதோ பொன்னாடை போர்த்துக் கொண்டு புவிப் பெண்ணாள், செந்நெல் மணி மாலைகள் அணிந்து தென்றலாளுடன் தேனொழுகப் பேசி, தெவிட்டாது பாடி, கோலம் காட்டி நிற்கிறாள்!

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டுகோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வை சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டில் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள் - மூதறிஞர்கள் கூறிச் சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகத்திலும் ஏராளம், ஏராளம், அவன், அவை பற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை; கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர் அவன் செய் தொழிலின் சிறப்பு குறித்துச் செப்பியுள்ள ஒப்பில் புலமை நிறைமணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைந்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவை பற்றி அவன் அறியான்; 'கருக்கலிலே போக வேண்டும்- பசுந்தழை பத்து வண்டி வேண்டும்- பண்ணையாரிடம் இன்னது கூற வேண்டும்- வேலியை இவ்விதம் சரி செய்ய வேண்டும்' என்ற இவை பற்றித்தான் பேசுகிறான். 'பயிர் எவ்வளவு காணும்' என்பதை உரைக்கிறான்- 'மணி' அவனுக்கல்ல என்பது தெரிந்தும் மகிழ்ச்சியுடன், அவன் அளித்திடும் 'அம்பாரம்' பண்ணையாரைப் பொன்னார் மேனியராக்குகிறது - புவியாளும் வாய்ப்பினைத் தருகிறது! அவன் தன் கண்ணாரப் பயிர் ஏறுவது கண்டு களிப்பெய்துகிறான் - தன் உழைப்பு நற்பலனைத் தந்தது என்பதறிந்து!

'உழவர் திருநாள்' இப்பொங்கற் புதுநாள் - என்பதை அனைவரும் இன்று அறிந்து போற்றுகின்றனர்.

பண்படுத்திப் பரம்படித்து, எருவிட்டு ஏர்பிடித்து, விதை தூவி நாற்று நாட்டு, களை எடுத்து, கதிர் முற்றிடக் கண்டு அறுத்தெடுத்துப் புடைத்துக் குவித்து உணவுப் பொருளை உலகோர்க்கு உழவர் அளிக்கும் இவ்விழாதான், நாம் மகிழ்ச்சியுடன் பெருமையுடனும் கொண்டாடும் ஒரே விழா!

ஒருநாள் - ஊரெல்லாம் விழா! ஒரு திங்களும் போதுமானதாக இல்லை - நமக்கு, நாட்டவரிடம் இவ்விழாவில் மாண்பினைக் குறித்து, வியந்து, விரித்துரைத்திட!

ஊர், விழாக்கோலம் கொள்ள வேண்டும். இசையும் கூத்தும் உடற் பயிற்சி விளையாட்டுகளும் இன்ன பிறவும் நடை பெறவேண்டும்; தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும் அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நய வஞ்சகர் போக்கு பற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டி வருதல் வேண்டும்.

பிற எந்த விழாவும், வீட்டோடு அமையும், அல்லது, கோயிற் பெருவெளியில் நிகழும். மக்கள் மன்றம் கூடி, மகிழ்ச்சிப் பெருக்குடன் கலந்து களிப்பதற்கான விழாவாக இப்பொங்கற் புது நாளே அமைந்திருக்கிறது. ●



# உழைப்போம்! உயர்வோம்!

## —டாக்டர் எம்.ஜி.ஆர்

தமிழக மக்கள் கொண்டாடும் விழாக்களில் பொங்கல் திருநாள் தனிச் சிறப்புமிக்கதாகும். உழைப்பே உயர்வு தரும்என்பதையும், உழைப்பின் பயனை அனைவரும் பகிர்ந்துண்ணுவதே தமிழகத்தின் பண்பாடு என்பதையும் உலகறியக் கூறிடும் விழாவே பொங்கல் விழா.

உழவரும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளும் தாங்கள் விளைவித்த செல்வங்களைச் சமுதாயத்துக்கு உரிமையாக்கிடும் சமத்துவ விழா இது. இயற்கை அளிக்கும் வளம் அனைவருக்கும் பொது என்பதை மையக் கருத்தாகக் கொண்டுள்ள திருநாள், பொங்கல் திருநாள்.

பொங்கல் திருநாள் போதிக்கும் நற்கருத்துக்கள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவங்கள் ஆகும்.

பல்வேறு ஆற்றல் பெற்றவர்கள் தங்களுடைய திறமைகளையும் உழைப்பையும் பொது நன்மைக்காக் ஒப்படைக்கின்ற ஒரு கூட்டு முயற்சியே இன்றைய தேவை என்பதே பொங்கல் திருவிழாவின் அடிப்படை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டு முன்னேற்றத்துக்கான பணிகளிலும், நம்மை விட நலிந்துள்ள மக்களின் துயர்களைப் போக்குவதிலும் கூட்டு முயற்சியோடு நாம் இன்னும் நம்மை முழு மூச்சுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வகையில் அரசின் திட்டங்களை நிறைவேற்றுகிற பொறுப்புக்களை ஏற்றுள்ளவர்களின் கடமை மகத்தானதாகும்.

''உழைப்பே உயர்வுதரும்''
''உழைப்போம், உயர்வோம்''
''உழைப்போரே உயர்ந்தவர்''
''உழைப்பவராலே உலகம் உயர்ந்திடும்''

என்கின்ற சீரிய இலட்சிய முழக்கங்களை நெஞ்சில் பதிய வைத்திடும் தமிழர் திருநாள் பொங்கல்!



# ஏழை எளிய மக்களுக்குப் பொங்கல் பரிசு!

## விழுப்புரம் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

'காவிரி - தென்பெண்ணை - பாலாறு
எனமேவிய ஆறுகள் பல ஓடத்
தன்மேனி செழித்த தமிழ் நாடு'

—என மகாகவி பாரதி பாடிய பாட்டுக்கேற்ப நம்முடைய தென்பண்ணை ஆறு வேறு எந்த ஆண்டிலும் இல்லாத புதுமையாக, இந்த ஆண்டு கரைபெருக்கெடுத்தோடி, இம்மாவட்டத்தின் மேனி செழித்தது என்று சிறப்பைப் பெற்றுள்ள மகிழ்ச்சியோடு நாம் இங்கே கூடியுள்ளோம்.

இவ்வளவு பெருமகிழ்ச்சியை நமக்கு வழங்கிய இயற்கை, நாம் ஆற்றவேண்டிய கடமைகள் பல வற்றையும் சில சின்னங்களாக விடுத்துச் சென் றுள்ளது.

மாவட்டம் முழுவதிலும் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின் விளைவுகளால் ஏற்பட்ட பாதிப்பி லிருந்து, மக்களைக் காக்கும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அனைவர்க் கும் என் பாராட்டை - நன்றியை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். கடும் மழை- வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் - இம்மாவட்டத்திற்கும், பல்வேறு நலத் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் எங்கள் கடமையை ஆற்றும் வகையில்தான், இம்மாபெரும் விழா நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

வழக்கம்போல் சில மேதாவிகள் இதையும் விமரிசனம் செய்வார்கள் என்பதை, என்னைவிட இங்கே அமர்ந்துள்ள நீங்கள் நன்கு அறிவீர்கள்.

''போற்றுவோர் போற்றலும் தூற்றுவோர் தூற்றலும் இவ்வையத்துள் இயற்கையே!''

என்பதை மனதில் கொண்டு எங்கள் பய ணத்தை - பணியைத் தொய்வின்றி ஆற்றி வரு கிறோம் என்பதன் எடுத்துக்காட்டுதான், இம் மாபெரும் விழா என்பதை முதற்கண் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

கடந்த ஆறு மாதமாக நடைபெற்று வரும் எங்கள் அரசு உங்கள் அரசாக செயல்பட்டு வருவதை உணர்ந்திருப்பீர்கள். மலிவு விலை மது ஒழிப்பில் உண்மையாகவும் - உறுதியாகவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அரசாக;

காவிரிப் பிரச்சினை மட்டுமல்லாது, எங் கெங்கு தமிழ் இனம் வாழ்கிறதோ, அங்கெல்லாம் அவர்களின் நலன் காப்பதற்கும், தமிழர்களுக் குள்ள உரிமையைக் காப்பதற்கும், நம் பக்கம் நியாயம் உள்ளது என்பதை உலகறியச் செய்வ தற்கும் தீவிரம் காட்டுகிற அரசாக;

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை மிகச் செம்மையாக நடைமுறைப்படுத்த, தன் உயிரையும் பணயம் வைத்துச் செயல்படுகிற அரசாக;

தமிழகத்தின் பொருளாதார நிலையினை உயர்த்தவும், தொழில் வளத்தைப் பெருக்கவும் முனைப்பான வேகம் காட்டுகிற அரசாக;

வளர்ச்சிப் பணிகளில் வேறெந்த அரசும் இதுவரை செய்தறியாத, செம்மையான பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசாக,

எங்கள் அரசான உங்கள் அரசு செயல்பட்டு வருகிறது. அத்தகைய உங்கள் அரசுதான், மழையாலும் வெள்ளத்தாலும் அவதிக்குள்ளாகி இன்னல்படும் மக்களுக்கு, நேரத்தோடு ஓடிவந்து உதவி செய்தது; அதன் தொடர் நடவடிக்கைகள் எவ்விதத் தொய்வுமின்றி நடைபெற்றிடும் வகையில், இன்று இங்கே இவ்விழா மூலம் பல்வேறு பணிகள் நடைபெற நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்ற ஆறுமாதக் காலத்திற்குள் எண்ணற்ற இடர்ப்பாடுகளை, இடுக்கண்களைச் சந்தித்த அரசு, இந்தியாவில் ஒன்று உள்ளதென்றால், அது நம் தமிழக அரசாகத்தான் இருக்க முடியுமே ஒழிய, வேறெந்த அரசும் இத்தனை இன்னல்களை இவ்வளவு குறுகிய காலத்தில் எதிர்கொண்டிருக்க முடியாது.

இருந்தும், மக்கள் நலப் பணிகளை விரைந்தும், வேகமாகவும் ஆற்றிட, நாங்கள் என்றும் பின் வாங்கியதில்லை; இனி என்றும் பின்வாங்கப் போவதும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு இயந்திரம் செம்மைப்பட இயங்கிட, மிக இன்றியமையாத் தேவையான 'நிதி நிலை' நெருக்கடி, வேறெந்த காலக் கட்டத்திலும் இல்லாத அளவுக்கு இன்றைய உங்கள் அரசு எதிர் நோக்க வேண்டியுள்ளது என்பதை, விவரம் அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

தமிழகத்தை ஆண்ட ஒப்பாரும் - மிக்காரும் அற்ற, தனித்தன்மை மிக்க முதலமைச்சர்களாகக் கருதப்பட்டு வரும் மூதறிஞர் இராஜாஜி, கர்ம வீரர் காமராசர், பேரறிஞர் அண்ணா, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் ஆண்ட காலங்களில் எல்லாம்கூட, தற்போதுள்ளது போன்ற மிகக் கடுமையான நிதி நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் இருக்கவில்லை.

அவர்கள் அனைவரும் ஆண்ட காலங்களில்,

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் அன்புடன் வரவேற்றார்கள் (3.1.1992).**



கஜானா நிரம்பி வழிந்தது எனக் கூற முடியா விட்டாலும், மிகக் கடுமையான நிதிச்சுமை அவர்களுக்கு இருந்தது எனக்கூற முடியாது. குறிப்பாக இராஜாஜி அவர்கள் , முதலமைச்சராக இருந்த போதும், காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், பல ஆண்டுகளில் அவர்கள் 'உபரி பட்ஜெட்' போடும் அளவுக்கு மிகுதியான நிதி ஆதாரங்களைப் பெற்றிருந்தனர். அப்பேர்ப்பட்ட மகத்தான தலைவர்கள் எல்லாம் ஆண்டபோது, மிகச் சுலபமாகச் சமாளிக்கக் கூடிய பொருளாதாரப் பிரச்சினைகள் தான் இருந்துவந்துள்ளன.

அத்தகைய உயரிய தலைவர்கள் எல்லாம் சந்தித்து அறியாத நிதிச் சுமையினை - பொருளாதார நெருக்கடியை, சமாளிக்க வேண்டிய அவசியம், சாமான்யமான நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த வேளையில் ஏற்பட்டுள்ளது என்பதை, உங்களிடத்தில் விளக்கப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

உங்கள் சகோதரியான நான் ஆட்சித் தலைமையேற்ற இந்த ஆறு மாத காலத்தில் மட்டும், ஏறத்தாழ 1,200 கோடி ரூபாய் அளவுக்கான பல்வேறு வகைகளிலுமான பட்ஜெட் பற்றாக்குறையை எதிர்கொண்டு, அவற்றை எல்லாம் சமாளித்து, இன்று வெற்றிநடை போடுகிறோம்

**'தடா' சட்டம் தமிழகத்தைக் காக்க- தமிழக மக்களைக் காக்க- இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்கத் தான் பயன்படும்!**

என்பதில் இருந்து, எவ்வளவு கடினமாக நாங்கள் உழைத்து வருகிறோம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வளவு நிதி நெருக்கடி இருந்தும்கூட, மக்கள் நலப் பணிகளுக்காகக் கோடி கோடியாக இவர்கள் எப்படிச் செலவழக்கிறார்கள் என, மாற்றுக் கருத்துக் கொண்ட பலரும் இன்று நம்மைப் பார்த்து வியந்திடும் அளவுக்கு, பணி புரிந்து வருகிறோம் என்றால் அது மிகையாகாது.

ஒரு காலத்தில் ஒரு மாவட்டத்திற்கு மந்திரிகள் வருகிறார்கள் என்றால், தங்கள் செல்வாக்கைப் பிரகடனப் படுத்திக்கொள்ள வருவார்கள். அதிலும் சில மந்திரிகள் இருந்திருக்கிறார்கள்; அவர்கள் சொந்த ஊருக்குச் சென்றால் கூட அதிகாரம் கொடி கட்டிப் பறக்கும்; அரட்டல், உருட்டல், அரசாங்க எந்திரத் துஷ்ப்பிரயோகம் என்பது, கண்மண் தெரியாமல் தூள் பறக்கும்; அனுபவித்தவர்கள் தானே நீங்கள்.......? அதனால் அதிகம் சொல்ல வேண்டியதில்லை எனக் கருதுகிறேன்.

ஆனால், இன்று உங்கள் சகோதரியான நான், எங்கள் அமைச்சர்களை அழைத்துக் கொண்டு, முதலமைச்சராக ஒரு மாவட்டத்திற்குள் நுழைகிறேன் என்றால், நுழையும்போதே ஒருங்கிணைந்த வகையில், சுமார் 75 கோடியிலிருந்து 100 கோடி ரூபாய் வரையிலான பல்வேறு திட்டங்களை, உடன் செயல்படுத்துவதற்கான செயல் திட்டங்களோடுதான் நுழைகிறோம் என்பதில் இருந்து, இதுவரை ஆண்டவர்களுக்கும் எங்களுக்குமுள்ள வேறுபாட்டை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். இன்று நான் இங்கே கலந்து கொள்ளும் இந்த விழா நிகழ்ச்சி மூலம் மட்டும், இம்மாவட்டத்திற்கு 175 கோடி ரூபாய் திட்டங்கள் வந்துள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப் பார்த்துக் கூட சிலர் வயிற்றெரிச்சல் படுகிறார்கள்; 'ஆடம்பரப் பவனி' என்று ஓர் வார்த்தையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்; எரிச்சலோடு எழுதுகிறார்கள்; ஏளனமாய்ப் பேசுகிறார்கள்; நெஞ்சம் குமுறுகிறார்கள்.

மக்கள் எங்கள் மீது செலுத்தும் அன்பும், அரவணைப்பும் அவர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்குகிறது; எனவே இதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. இவர்கள் பேச்சுக்கும், எழுத்துக்கும் நாங்கள் அஞ்ச வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். ஆனால்,

நாங்கள் மக்களுக்குப் பயப்படுகிறோம்;
நாங்கள் நீதிக்கும் நேர்மைக்கும் பயப்படுகிறோம்;
நாங்கள் உண்மைக்கும் சத்தியத்திற்கும் பயப்படுகிறோம்; அதே நேரத்தில், நான் இன்னொரு உண்மையைச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழி வந்த இந்த அரசு, எந்தக் காலத்திலும் எத்தகைய மிரட்டல்களுக்கும் பயப்படாது; குறிப்பாகப் புரட்டர்களுக்குப் பயப்படாது.

ஒரே வரியில் சொன்னால்,

நாங்கள் பயப்படவும் மாட்டோம் -
எவரையும் பயமுறுத்தவும் மாட்டோம்!

உண்மை இப்படி இருக்க,

'தடா' சட்டம் பயன்படுத்தப்படுகிறதே!
எங்கள் மீது பாய்கிறதே!' என்றெல்லாம் பயந்துபோய், சிலர் தவறான தகவல்களைத் தமிழக மக்களுக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்னும் பழமொழியை நீங்கள் அறிவீர்கள். அதுமட்டுமல்ல, 'வேங்கை வேதாந்தம் பேசுகிறது' என்பார்களே, அப்படித்தான் இவர்களது வாதமும் உள்ளது.

எந்த வகையில் நான் 'தடா' சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளேன்? சொல்ல முடியுமா அவர்களால்....?

என்னை அழிக்க நினைத்தவர்களுக்கு எதிராக நான் அதைப் பயன்படுத்தினேனா?

என்னை லாரி ஏற்றிக் கொல்ல நினைத்தார்களே சிலர்; அவர்களுக்கு எதிராக அதை ஏவி விட்டேனா?

இல்லை, எனக்கு மருத்துவ வசதியைத் தரக் கூடாது என்று அதிகாரத்தால் அனைவரையும் அதட்டினார்களே சிலர், அவர்கள் மீது அதைப் பிரயோகித்தேனா? சொந்த நலனுக்காகத் 'தடா' சட்டம் மட்டுமல்ல, வேறு எந்தச் சட்டத்தையும் துஷ்பிரயோகம் செய்கிற முதலமைச்சர் அல்ல நான், என்பதை மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு வாக்களித்த மக்களுக்கு, எங்களை ஆட்சியில் அமர்த்திய மக்களுக்கு, இந்த உண்மை தெரியும்; இதன் உண்மையான அர்த்தமும் புரியும்! எனவே, எங்கள் மீது வசை பாடுவோரைப் பற்றித் துளியும் கவலைப்படாமல், எங்கள் கடமையைச் செய்கிறோம்; கவனத்தோடு செயல்படு கிறோம். மக்களுக்குத் தொண்டாற்றவே பொது வாழ்வுக்கு வந்துள்ளோம் என்பதை உணர்ந்து காரியமாற்றி வருகிறோம்.

எங்களது இலக்கினை, அடையவேண்டிய இலட்சியங்களை, நாங்கள் தெளிவாக உணர்ந்துள்ளதால், எங்களது நெடும் பயணத்தில் எந்த விதத் தயக்கமும் இல்லை; தடுமாற்றமும் இல்லை.

எங்களது கொள்கையில் தெளிவுள்ளதால், எவ்வித மயக்கமும் இல்லை. ஆனால், தங்களது கொள்கைகளைக் குழப்பிக் கொண்டவர்கள், மக்களைக் குழப்ப வேண்டும் என்பதற்காக, தவறான தகவல்களை இப்போது மக்களுக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விளக்கம் அளிக்கவே இதனைத் தெரிவித்தேன்.

'தடா' சட்டம் தமிழகத்தைக் காக்க - தமிழக மக்களைக் காக்க - இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்கத்தான் பயன்படுமே தவிர, எங்கள் அரசியல் எதிரிகளை அடக்குகிற ஆயுதமாக, சொந்த விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்கிற கருவியாக, சுயநலத்திற்காகப் பயன்படுத்தப்படுகிற சட்டமாக, அதைப் பயன்படுத்த நாங்கள் நினைத்ததும் இல்லை; இனி நினைக்கப் போவதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள சிலருக்குச் சில வினோதப் பழக்க வழக்கங்கள் உண்டு. அதை நானும் அறிவேன்; மக்களும் அறிவார்கள்.

எங்கே தங்களை மக்கள் மறந்து விடுவார்களோ? எங்கே விளம்பரமின்றி மறைந்து போய் விடுவோமோ? என்ற பயத்தில், தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் முயற்சியாக, தாங்கள் கைது செய்யப்பட்டதாக ஒரு புரளியைக் கிளப்பி விடுவது; அரசுப் பேருந்துகள் மீது அவர்களாகவே கல்லெறியச் செய்வது; மற்றவர்களைக் கலவரம் செய்யத் தூண்டுவது; 'கைது செய்து பார்', 'வானம் வில்லாக மாறும், பூமி பாயாகச் சுருளும்' என்றெல்லாம், அடிக்கடி நிறம் மாறும் சில பச்சோந்திகளை விட்டுப் பேசச் செய்வது; இவை எல்லாம் எதற்காக? ஏன் என்று நினைக்கிறீர்கள்? மக்கள் அவர்களை மறந்துவிடக் கூடாதே என்பதற்காகத் தானே தவிர,, வேறு எதற்காக?

அவர்கள் சம்பாதித்த பல கோடிகளைக் காப்பாற்றிக் கொள்ள, ஐந்தரைக் கோடி மக்களை அல்லலுக்கு உள்ளாக்க நினைக்கிறார்களே...... இது நியாயமா?

மக்களுக்கு உழைக்கத் தயாராக இருக்கும் இந்த அரசின் ஆக்கப் பணிகளுக்கு ஊறு விளைவிக்க நினைக்கிறார்களே........ இது நியாயமா?

அதோடு, அவர்கள் செய்திருக்கிற தவறுகளுக்காக, தமிழகத்திற்கு இழைத்திருக்கிற கொடுமைகளுக்காக, தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள துரோகங்களுக்காக, மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்க, சிறைச்சாலைதான் பாதுகாப்பான இடம் எனக் கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை; அவர்களிடம் இத்தகைய அவசரப் பேச்சுக்கள் அதிகமாக உள்ளன.

ஆனாலும், அவர்கள் பாதுகாப்பாகச் சிறைக்குப் போக அவசரப்படுவது போல, அரசு அவசரப்பட முடியாது. அவர்கள் மக்களை ஏமாற்ற நடத்தும் போலி அரசியலை, மக்களுக்கு அடையாளம் காட்டவேண்டிய எங்கள் கடமையைத்தான் நாங்கள் செய்து வருகிறோம்.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்வதற்கென, இடு பொருட்களைக் காலத்தோடு அவர்களுக்கு விநியோகிப்பதற்காக மட்டுமே, 10 கோடி ரூபாய் அளவில் உதவிகள்!**

குறிப்பாக, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, இந்த அரசு எவரையும் கைது செய்யாது, பழி வாங்காது என்பதைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில்; மக்களுக்கு உண்மையைச் சொல்ல, சட்டம் தடையின்றி அதன் வேலையைச் செய்ய, இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடைபெறுகிற இந்த அரசு விழாவில், மொத்தமாக 175 கோடி ரூபாய்க்கான பல்வேறு திட்டங்களை நான் துவக்கி வைத்துள்ளேன். குறிப்பாக, நல்ல மழை பெய்ததற்குப் பிறகு, உழவர்கள் தங்களது விவசாயப் பணிகளை உடன்

துவக்குகிற வகையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்வதற்கென, இடுபொருட்களைக் காலத்தோடு அவர்களுக்கு விநியோகிப்பதற்காக மட்டுமே, 10 கோடி ரூபாய் அளவில் உதவிகள், இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை ஊக்குவிக்கிற வகையில், எங்களால் தீட்டப்பட்டுள்ள சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் வேண்டிய அடிப்படை வசதிகளை, போர்க்கால நடவடிக்கைகள் மூலம் தற்போது வழங்கிக் கொண்டு வருகிறோம். அந்த வகையில், இந்த மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வீதம், 34 கோடி ரூபாய்க்கான திட்டங்கள், இன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. அதேபோல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (District Rural Development Agency) மூலமும், ரூ.28 கோடி செலவில் இன்று பல்வேறு

**சென்னையையும் கடலூரையும் இணைக்கும் 178 கிலோமீட்டர் நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் இதர சாலைகளைச் செப்பனிடுகிற பணிக்காக, 19.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.**

திட்டங்கள் துவக்கி வைக்கப்படுகின்றன.

நமது கிராமங்களையும், பெரிய நகரங்களையும், சாலைகள் மூலம் இணைத்து, கிராமியப் பொருளாதாரத்தை விரைந்து முன்னேற்றுகின்ற எங்கள் அரசின் நோக்கமும், முன்னுரிமையோடு பல்வேறு இடங்களில் செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த மாவட்டத்தைப் பொருத்தவரை, அந்த எண்ணத்தை நிறைவேற்றுகிற வகையில், சென்னையையும் கடலூரையும் இணைக்கும் 178 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம், இதர சாலைகளைச் செப்பனிடுகிற பணிக்காக, 19.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்தின் முக்கியத்துவம், தற்போது நகரத்தில் வாழ்கிற மக்களாலும், கிராமங்களில் வாழும் மக்களாலும் நன்கு உணரப்பட்டுள்ளதால், போக்குவரத்து வசதிகள் சிறப்பாக அமைய, போக்குவரத்துக் கழகங்கள் செம்மையாகச் செயல்படுவது அவசியமாகும்.

அந்த வகையில், இந்த மாவட்டத்தில் இயங்கி வரும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணியாளர் குடியிருப்புகள், மற்றும் தொழிலாளர்களுக்கான மருத்துவமனை, ஆகியவற்றுக்கான பணிகளைத் தொடங்கி வைக்கிறேன் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேருந்து உதிரி பாக உற்பத்தித் தொழிலக விரிவாக்கக் கட்டடம், புதிய பணிமனைகள் மற்றும் தொழிலாளர் நலக் கட்டடங்கள், மனமகிழ் மன்றம், பயிற்சி மையம், மாமண்டூர் பயண வழி உணவகம் ஆகியவைகளுக்காக, 13.70 கோடி ரூபாய் செலவில், திட்டங்கள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்குப் பொங்கல் பரிசாக, இன்று ஒரு மாபெரும் திட்டத்தையும் இந்த விழாவில் தொடங்கி வைத்ததில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்புதிய திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள அனைத்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியோர், பொங்கல் பரிசாகச் சேலை, வேட்டி இலவசமாகப் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், தமிழர் திருநாளாம் பொங்கல் அன்றுகூட, புத்தாடை வாங்கி அணிய முடியாத நலிந்த பொருளாதார நிலையில் பலரும் உள்ளனரே என்று வருந்தினேன். அரசிற்கு நிதிநிலை நெருக்கடி இருக்கும் இத்தருணத்திலும், இந்த ஆண்டு பொங்கல் நாளை என் சகோதரிகளும், சகோதரர்களும், புத்தாடை அணிந்துதான் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்தேன். அதன்படி இன்று 41.56 கோடி ரூபாய் அளவிற்கு இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவோருக்கு, புத்தாடைகள் பொங்கல் திருநாளுக்கு முன்னரேயே வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளேன். இதிலிருந்து, தமிழகத்தில் வாழும் ஏழை எளியோருக்கென எத்தகைய திட்டங்கள் என் மனதில் உள்ளன என்பதையும்,

இரவு பகல் எந்நேரமும்,

'இலையே, உணவிலையே - கதி
இலையே எனும் நிலையே இனி இலையே -
எனும் நிலையே இனி வரவே
முரசறைவாய் முரசறைவாய்'

—என்னும் பாவேந்தர் பாரதிதாசன் வறியோர் வளம் பெற பாடிய பாட்டின் உணர்வுதான், என்னகத்தே உள்ளது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.



இன்னும் கதர் கிராமத் தொழில் வாரியம், மீன்வளத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, ஆகிய பல துறைகளின் சார்பாகவும் திட்டங்கள் பல வற்றைத் துவக்கி வைத்துள்ளேன்.

இத்திட்டங்களினால், விவசாயத்தை நம்பி யிருக்கிற இம்மாவட்ட மக்கள், பெரிதும் பயன்டை வார்கள் என்று உளமார நம்புகிறேன். தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முன்னே, இன்று விசுவரூபம் எடுத்துள்ள பிரச்சினைகள் பற்றி நம் அனைவருக்கும் நன்கு தெரியும்.

தமிழக விவசாயிகளுக்குள்ள பெரிய பல வீனமே, அவர்கள் பல காலம் விவசாயத்திற்காகப் பருவமழையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. சில நேரம் பாசனத்திற்குரிய தண்ணீரை, பக்கத் திலிருக்கிற மாநிலங்களில் இருந்து போராடிப் பெற வேண்டி உள்ளது. இந்த வகையில் உருவெடுத்தது தான் காவிரிப் பிரச்சினை என்பது உங்களுக்குத் தெரியும்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் இயற்கையாகவே நியாயம் நம் பக்கம் இருந்ததால், கர்நாடக அரசு நீதி வழங்க மறுத்த நேரத்தில், வானம் மழை பொழிந்து நமது இன்னலைத் தீர்த்து வைத்தது. இப்போது உச்ச நீதிமன்றத்தின் மூலமும், மத்திய அரசின் மூலமும், சட்டத்தின் மூலமும், நமது நியாயம் உணரப்பட்டு, நீதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்த நீதி மதிக்கப்படாமல், அதுவே காழ்ப்புணர்ச்சியைத் தூண்டுகிற காரணமாகி, கர்நாடகத்தில் வாழ்ந்து வருகிற ஏதுமறியாத தமிழர்கள் பெருத்த துன்பத்திற்குள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளாகப் பண்பாட்டால், பழக்கவழக்கங்களால், திராவிட இன ஒற்றுமையால், கர்நாடக மக்களோடு இணைந்து வாழ்ந்து வருகிற தமிழர்கள், தாங்கள் செய்யாத தவறுக்காக, எவ்வகையிலும் அவர்கள் சம்பந்தப் படாத பிரச்சினையில், அவர்கள் கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்; அவர் களது உடைமைகளும் சொத்துக்களும் பறிபோயுள் ளன; மனித உயிர்களும் பறிக்கப்பட்டுள்ளன. எஞ்சியோர் தங்கள் மானத்தையும், உயிரையும் காத்துக்கொள்ள, அகதிகளாய் இலட்சத்திற்கும் அதிகமானோர் தமிழகத்தில் தஞ்சம் புகுந் துள்ளனர்.

ஒரே வரியில் சொல்லப்போனால், நமது தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கப் பட்டுள்ளது! சிறுபான்மையாய் வாழ்கிற எந்தச் சமூகத்தின் மீதும், கலவரத்தின் மூலம் பெரும் பான்மையாய் வாழ்கிற மக்களால், அநீதி இழைக் கப்பட முடியுமென்றால், பிறகு எந்த மாநிலத் திலும் அமைதி நிலவ வழியில்லை!! இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், கர்நாடகத்தில் சிறுபான்மையாய் வாழ்கிற தமிழர்களுக்கு, முழுப் பாதுகாப்பு வழங்க, மத்திய அரசை நான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறேன். தமிழகத்திற்குத் தர்மத்தின் அடிப்படையில், சட்டத்தின் அடிப் படையில், அமைந்துள்ள உரிமையை நிலைநாட்ட, தமிழ்நாடு எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை மட்டும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்!

நியாயமும் - நீதி மார்க்கமும் - தர்மமும் நம் பக்கம் உள்ளதால், நாமே இறுதி வெற்றி பெறுவோம் என்னும் உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையில் ஏற்படும் இன்னல்களையும், சோதனை களையும், வேதனைகளையும், இடர்ப்பாடுகளை யும், இழப்புகளையும், வழிந்தோடும் விழி நீரைத் துடைத்தெறிந்து விட்டு, இன்முகத்தோடு எதிர் கொள்வோம்! வீறுநடை பயில்வோம்! வெற்றி கொள்வோம்! எனச் சூளுரைத்து, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக்கூறி விடை பெறுகிறேன்.

**—ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக்க விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை (7.1.92)**



# ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக்க விழா.

ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பொங்கலை முன்னிட்டு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக்க விழா தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்தில் 7.1.1992 அன்று நடைபெற்றது.

விழுப்புரம் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் திடலில் நடந்த இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, இந்தத் திட்டத்தையும் ரூ.175 கோடிக்கான பல் வேறு நலப்பணித் திட்டங்களையும் துவக்கி வைத்து, விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவில் ரூ.14.52 கோடி செலவில் கட்டப் பட்டுள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக ஊழியர் குடியிருப்பு மற்றும் பிற திட்டங்களையும், ரூ.46.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மீனவர் குடியிருப்புகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மானியம்:**

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ரூ.10 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடுபொருள் மானியம் வழங்கினார்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வீதம் இந்த மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 34 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டன.

விழாவில் ரூ. 258 இலட்சம் செலவில் ஊரக வளர்ச்சித் துறைப் பணிகள், ரூ.60 கோடி செலவில் டானிடா திட்டப் பணிகள், ரூ.105 இலட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியப் பணிகள் ஆகியவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதல்வர் அவர்கள் விழா மேடைக்கு வரும் முன்னர், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகத்தில் ரூ.5 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள தந்தை பெரியார் சிலை மற்றும் நுழைவுவாயில் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

விழாவிற்கு, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். முன்னதாக, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, இறுதியில் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வாழ்த் துரை வழங்கினார்.

**நினைவுப் பரிசுகள்:**

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் ஆகியோர் நினைவுப் பரிசுகள் வழங் கினார்கள்.

அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. சி. அரங்கநாயகம், திரு. எஸ். முத்துசாமி, திரு. ஜி. விஸ்வநாதன், திரு. ஈ. மதுசூதனன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. கே.பி. கிருஷ்ணன், திரு. டி.எம். செல்வகணபதி, திரு. முகமது ஆசிப், திரு. டி. ஜெயக்குமார், திருமதி இந்திர குமாரி ஆகியோரும் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்துகொண்டனர்.

விழாவினையொட்டி விழுப்புரம் நகரில் வண்ண மின்விளக்கு அலங்காரம் செய்யப் பட்டிருந்தது.

**- நிகழ்ச்சித் தொகுப்பு:**
**ஜே. சந்திரன்.**

# வான்புகழ் வள்ளுவருக்கு வாழ்த்து மாலை!

எக்காலத்திற்கும் ஒத்துவரும் இயல்பினது. எண்ணில் வகைக் கவிஞரும் தம் நூல் ஏற்றமுற எடுத்த சொல்லையும் பொருளையும் உடையது. பல்லுரைகாரரும் பரிந்தெடுத்த பாங்கினது. ஞான நூலார் பலர்க்கும் நல்கிய பொருளது. எவ்வறத்தினரும் தள்ளாரும் கொள்ளுந் தருமத்தது. ஏனைய நூல்களை வாசிக்குங்கால் வரும் ஐயங்களை அகற்றும் ஆசிரியத் தன்மையது. பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது. வேற்று மொழி வல்லார் காணாத விளக்கத் தகக்து.

—திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்

திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொது மறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

அறம், பொருள், இன்பம்- இம் முப்பொருளையும் ஒரிடத்தே இயையச் சேர்த்து விரிக்கற் பாலதை விரித்தும், சுருக்கற் பாலதைச் சுருக்கியும் அரும் பெறல் மணிகளை யொருசிறுபேழையினகத்துப் பொற்புற வைத்தாங்குக் கவின் பெற மிளிருமிவ்வருமைத் திருக்குறள் போன்ற ஒரு நூல் எம்மொழியிலும் காண்பதரிது. எப்பாலவர்க்கும் எவ்வெக்காலத்தும் உயிர்க்குறுதி பயப்பனவாய பொருள்களை இன்புற விளக்கி அவரை யுய்விப்பதே இத்தொன்னூலின் மாட்சி.

— சுவாமி விபுலானந்தர்,
யாழ்ப்பாணம்

கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக்கும் ஒப்ப முடிவதாகும். அத்திரட்டு நூல்களுள்ளும் வள்ளுவர் நூல் தலை சிறந்ததென்பதற்கு இடை நெடுங்காலம் பிற பல நூலும் வழக்கிழந்தொழியவும், என்றும் பிரபல நூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

திருவள்ளுவர் தெய்வப்புலமை வாய்ந்தவரென்பது திண்ணம். அவர் பெரும் புலமையும் நுண்ணறிவும், அரிய பொருள்களைச் சிறிய செய்யுளில் அமைத்துக் கூறும் ஆற்றலும் படைத்தவர். அவர் கூறியருளிய அறநூலொன்றே உலகத்தார் அறிந்துய்ய வேண்டிய அறங்களையெல்லாம் தெள்ளிதின் விளக்கிக் கூறுவது; அரிய பொருள்களை ஆடியிற் காட்டும் பொருள்போல் அமைத்துக் காட்டுவது; ஒப்புயர்வற்ற உவமைகளைப் பொருள்களுக்கு ஏற்றவாறு பொருந்தக்கொண்டு விளங்குவது.

—பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்.

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வாழ்க்கை நூல்



ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை உலகிற்கு அளித்தது தமிழ். 2,000 வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றாச் சிறப்பை அடைந்தவர். அவர் தந்த திருக்குறள் தலை சிறந்த வாழ்க்கைத் துணை நூல்.

—சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

திருக்குறள் ஓதற்கெளிதாய், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாய், நவில் தொறும் நயம் பெருகும் நூலாய் விளங்குகின்றது. ஏனைய பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்ற கடுந்தமிழ்ப் பதங்களும், பத்துப் பாட்டு முதலிய நூல்களிலுள்ள இறுக்கமும் மயக்கமும் திருக்குறளில் இல்லை. நூல் முழுமையும் திருந்திய செப்பமும், செம்மையும் வாய்ந்து விளங்குகின்றது. நூலின்கண் அமைந்து விளங்கும் இயல்களும், அதிகாரங்களும் ஒன்றற்கொன்று இயைபுடையனவாய்ப் பல தொடர்களால் அமைந்த அருமணி வடம் போல் விளங்குகின்றன.

—டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை.

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப் போற்றி வருகின்ற ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும் பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்ஸ்ன், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது. "அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியவன்" என்று.

—ப. ஜீவானந்தம்.

"பாரத பூமியின் அறநெறியை விளக்கும் நூல்களுள் சிறந்தது திருக்குறளே"

—ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கரசாரிய சுவாமிகள்

திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசியல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டு மாறிய பிறகும், திருவள்ளுவரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து நமக்காக அறிவுரை கூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய்மொழி போல் விளங்குகிறது.

—டாக்டர் மு. வரதராசனார்.

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; நல்வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக் காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால், இவ்வுலகு இன்பத்தின் நிலைக்களனாய் இனிது விளங்கும்.

—பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார்.

நமது சரித்திரத்திற்கும், நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியும். ஆயினும், அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியுமாகையால், பயன்படுமாகையால், திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

—தந்தை பெரியார்.

குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப்பூச்சிகள் என்று கூறியவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர் கெட்டது? இன்று மீண்டும் குறள் நெறிப்படி சாதி, சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன் வரவேண்டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

—பேரறிஞர் அண்ணா.



# புகழ் பாடு தை மகளே!

## கவிஞர் இளந்தேவன்

மஞ்சள் முகம்காட்டி, மனைப்பொங்கல் மணங்காட்டி,
கொஞ்சும் வயல்மேனிக் கோலமிகும் எழில்காட்டி,
செஞ்சொல் தமிழ்காட்டி, சின்னஇடை நடம்காட்டி
வஞ்சியென வந்தவளே, வரவேற்றோம் தைமகளே!

அண்ணலார் காந்தி, அரும்பெரியார், பேரறிஞர்,
மன்னவராம் எம்.ஜி.ஆர்., மாக்கவிஞர் பாரதியார்
தன்னுரிமைப் பாவேந்தர் தம்கனவை நனவாக்கும்
பெண்ணரசி பெரும்புகழைப் பேசவந்தாய் தைமகளே!

வேளாண் குடிகளுக்கு இலவசமாய் மின்சாரம்
தாளாண்மைத் தொழிலாளர் தலைதூக்கத் தனித்தொண்டு
நூலாளும் நெசவாளர் துயர்தீர்க்கப் பேருதவி
மேலான தமிழாட்சி மேன்மையிது தமிழ்மகளே!

ஆலைக் கரும்பாய் அல்லலுற்றுத் தவிக்கின்ற
ஏழைக்குச் சேலை, எளியோர்க்கு வேட்டி, ஒரு
வேளைக்குச் சத்துணவு விரைவாய்க் கிடைக்குதடி
தாழைக்கு வாசம் தரவந்த தைமகளே!

சாராயம் தேங்கும் சதுப்புநில மாயிருந்து
தீராத துயர்க்கிருமி தினம்தந்த தமிழ்நாட்டில்
ஓராணை யாலே 'மது' அரக்கன் தனையொழித்த
தீராதி தீரமதைத் தினம்பாடு தைமகளே!

'தண்ணீரைத் தா!' என்றால் தங்கியுள்ள தமிழர்களின்
செந்நீரை ஓடவிட்டுச் சிரிக்கும்கரு நாடகத்தார்
வெந்நீரைத் தேசியத்தின் வேருக்கு வார்த்தாலும்
கண்ணீரை அடக்கிக் கட்டுண்டோம் தைமகளே!

தாய்கொண்ட பொறுமைதனைத் தன்னடக்கப் பண்பாட்டைப்
பேய்கொண்ட சிறுமதியார் பின்னும் மதியாரேல்
வாய்கொண்டு வரலாறு வாழ்த்துகின்ற தமிழ்வீரம்
பாய்கின்ற நாள்விரைவில் பார்ப்பாய்நீ தைமகளே!

மண்மகளின் பொறுமைக்கும் மலர்மகளின் திருவுக்கும்
நன்மகளாம் கலைமகளின் நல்லறிவுத் திறனுக்கும்
பெண்மகளாய் வந்துதித்த பெருமாட்டி யாய்விளங்கும்
பொன்மகளின் ஆட்சிக்குப் புகழ்பாடு தைமகளே!





# வளமான வாழ்வுக்கு

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

## உரங்கள்






**மதராஸ்**
**பெர்ட்டிலைசர்ஸ்**
**லிமிடெட்**

VIJAY
MADRAS FERTILIZERS

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

தேசீய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343

# பொன்னிக்குப் பொங்கல் வாழ்த்து



## கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்

பொன்னிநதிக் கென்றேகல் லணை எழுப்பி,
பெருக்கெடுக்கும் வெள்ளத்தால் நாட்டு மக்கள்
இன்னலுறாப்படிகாத்தான் கரிகாற் சோழன்;
இரண்டாம்ரா சராசனென்ற சோழ மன்னன்
தன்னாட்டை வளப்படுத்தும் காவி ரிக்குத்
தடைநேர்ந்த தோர்மலையால் என்ற றிந்து
சென்றந்த மலைதகர்த்துக் காவி ரித்தாய்
துள்ளிவரச் செய்திட்டான் அற்றை நாளில்!

பொன்னியாற்றங் கரைநெடுகச் சிலமன் னர்கள்
பக்தியினால் சிவன்கோயில் எடுப்பித் தார்கள்;
பின்வந்த சோழப்பே ரரச ரெல்லாம்
பாங்குறவே கரைஉயர்த்திச் சிறப்புற் றார்கள்;
இன்னும்சில முடிமன்னர் கிளைக்கால் வாய்கள்
ஏற்படுத்திச் சோணாட்டை வளநா டாக்கி
மன்னுபுகழ் பெற்றார்கள்! நமக்கும் ஆறாக்
காவிரிக்கும் உள்ளதொடர் பைக்கண்டீரா?

இத்தனைக்கா லத்தொடர்பைப் பொய்யென் றார்கள்
இலந்தைநிறக் கருநாட கத்தார்; நாமோ
எத்தனைக்கா லம்ஆன போதும் நீதி
எங்கள்தமிழ் நாட்டினுக்கே என்றோம்; வென்றோம்!
தித்திக்கும் செங்கரும்பு, திராட்சை, வெல்லம்,
தேய்ந்தபிறை வடிவமுந்திரி எல்லாம் சேர்த்துப்
புத்தரிசிப் பொங்கல்வைக்கும் இந்த ஆண்டில்
பொன்னியினை வரவேற்போம்; வாழ்த்து வோமே!








## நாய்களைப் பாதிக்கும் நச்சுயிர் நோய்!

சென்னை மாநகரில் உள்ள நாய்களில் பார்வோ நச்சுயிர் நோயில் காணப்படுவது போன்ற அறிகுறிகளான வாந்தி, பேதி ஆகியன அதிகமாகக் காணப்படுகின்றன. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் நாய்களில் ஏறக்குறைய 20 சதவிகித நாய்கள் இந்நோயால் பாதிக்கப் பட்டுள்ளன.

பெரும்பாலான நாய் வளர்ப்போர், இந்நோய்க்கான தடுப்பூசி போடத் தவறுவதாலேயே இந்நோய் உண்டாகிறது. இந்நோய் உணவுப் பாதையைப் பாதிக்கக்கூடிய ஒரு தீவிர மற்றும் பரவக்கூடிய தொற்று நோயாகும். எந்த வயதானாலும் இந் நோய் பாதிக்க வாய்ப்புண்டு. எனினும், குட்டி நாய்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடுகிறது. பொதுவாக, இந்நோய் வெளிநாட்டு இன நாய்களை அதிகமாகத் தாக்குகிறது. இந்நோய், நச்சுயிர் கலந்த மலம் - வாய் வழியாகப் பரவவும் வாய்ப்புண்டு.

**நோயின் அறிகுறிகள்:** வாந்தி மற்றும் பேதி அதிதீவிரமாகக் காணப்படும். இவற்றில் இரத்தம் கலந்திருக்குமாதலால் சிவப்பு அல்லது கறுப்பு நிறத்தில் காணப்படும். பசியின்மை, சோர்வு மற்றும் நீர்வற்றி காணப்படும். காய்ச்சல் காண வாய்ப் புண்டு. சில நாய்கள் நோயின் அறிகுறிகள் கண்ட 24 மணி நேரத்தில் இறக்க வாய்ப்புண்டு. 4 முதல் 12 வார வயதான குட்டிகளில் இதய தசைகள் பாதிக்கப்படுவதால், இதயத் துடிப்பு நின்று திடீரென இறக்க நேரிடலாம். இறப்பதற்குச் சில மணி நேரங்கள் முன்பாக மூச்சு விடத் திணறல், கத்துதல் இருக்கலாம்.

இந்நோய் கண்ட நாய்களுக்குத் தாது உப்புக்கள் கலந்த நீரை இரத்தம் வழியாகச் செலுத்த வேண்டியது அவசியம். மேலும், நோயின் தன்மையைப் பொறுத்து இரத்தம் தர வேண்டியும் நேரிடலாம். எனவே, உடனடியாகக் கால்நடை மருத்துவரிடம் கொண்டு செல்வது அவசியமாகும். வாந்தி நின்று 24 மணிநேரம் ஆகும் வரை வாய்வழியாக எதுவும் தருதல் கூடாது. 7 முதல் 9 வார வயதான நாய்க் குட்டிகளுக்குத் தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோயினைத் தடுக்கலாம்.

**கால்நடை மருத்துவ அறிவியல் தகவல் பணி மையம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை.**

## மூளை அழற்சி நோய் ஏன் ஏற்படுகிறது?

'அல்ஷைமர் நோய்' (Alzheimer's Disease) என்று அழைக்கப்படும் மூளை அழ்ற்சி நோயைப் பற்றிப் புரிந்து கொள்வதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வயதானவர்களையே இந்த நோய் தாக்குகிறது. 85 வயது வரையில் உயிர் வாழ்வோரில் 25 சதவிகிதம் பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய் கண்டவர்களின் மூளையிலுள்ள பல செல்கள் அழிந்து போகின்றன. இதனால் இவர்களுக்குத் தீவிரமான ஞாபக மறதி ஏற்படுகிறது.

மனித மூளையிலிருந்து எடுக்கப்பட்ட 'பீட்டா அமிலாய்ட்' (Beta Amyloid) எனப்படும் புரதப்பொருளை, நன்கு வளர்ச்சியடைந்த எலிகளின் மூளைக்குள் ஊசி மூலம் விஞ்ஞானிகள் செலுத்தினர். அல்ஷைமர் நோய் கண்டவர்களின் மூளையில் ஏற்படுகின்ற அதே மாதிரியான அழற்சி இந்த எலிகளின் மூளையிலும் ஏற்பட்டது.

இதேபோன்று, மனித மூளையிலிருந்து எடுக்கப்பட்ட 'சப்ஸ்டன்ஸ் பி' (Substance P) என்று அழைக்கப்படும் மற்றொரு புரதப் பொருளை இந்த எலிகளின் மூளைக்குள் ஊசியால் செலுத்திய போது, அந்த எலிகளின் மூளைச் செல்கள் அழிவது தடுக்கப்பட்டது.

மனிதர்களுக்கும் இந்தப் புரதங்களைக் கொடுத்துச் சோதனை செய்து பார்ப்பதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கலாம். எனினும் அல்ஷைமர் நோயைத் தடுக்க முடியும் அல்லது குறைந்தபட்சம் தாமதப் படுத்த முடியும் என்பது, எலிகளிடம் இப்போது நடத்தப்பட்டுள்ள சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குரங்குகளுக்கும் இந்தப் புரதத்தைக் கொடுத்து இதுபோலச் சோதனை நடத்துவதில் விஞ்ஞானிகள் முனைந்து வருகின்றனர். குரங்குகளின் மூளை கிட்டத்தட்ட மனிதனின் மூளையைப் போன்று இருப்பதே இதற்குக் காரணமாகும்.

**-அமெரிக்கத் தகவல் நிலையம்**

# இந்தியப் பொருளாதாரத்தில்

# கால்நடைகளின் பங்கு

- டாக்டர் எஸ். சுப்பையா,
துணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத் துறை
மாவட்டக் கால்நடைப் பண்ணை
ஒரத்தநாடு.

**த**மிழகத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை தொடங்கி நூறு ஆண்டுகளாகின்றன. இத்தருணத்தில் நமது நாட்டின் கால்நடைகளின் முக்கியத்துவம், அவற்றின் மதிப்பு, நாட்டின் பொருளாதாரத்தில் அவற்றின் பங்கு பற்றியும், கால்நடை வளர்ப்பில் இன்றுள்ள முக்கிய பிரச்சினைகள் பற்றியும், அதற்குப் பரிகாரங்கள் பற்றியும் சிந்திப்பதும் பரிசீலனை செய்வதும் மிக அவசியமாகும்.

நமது நாட்டின் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு மிக முக்கியமானதாகும். மற்ற நாடுகளை விட, நமது நாட்டில் அதிகமாக மாடுகளும் எருமைகளும் உள்ளன. 19 கோடி மாடுகள், 7 கோடி எருமைகள், 9.5 கோடி வெள்ளாடுகள், 5 கோடி செம்மறியாடுகள், 20 கோடி கோழிகள், ஒரு கோடி பன்றிகள் மற்றும் 20 இலட்சம் குதிரைகளும், ஒட்டகங்களும் நமது நாட்டில் உள்ளன.

நமது நாட்டிலுள்ள கால்நடைகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஒற்றை வரிசையில் நிறுத்தினால், பூமியைச் சுற்றி 11 சுற்று நிறுத்தலாம். அதேபோல் பூமியிலிருந்து சந்திரன் வரை நிறுத்தலாம். இந்த அளவிற்கு நமது நாட்டில் மிகுதியாக உள்ள கால்நடைச் செல்வங்களின் மதிப்பு 45 ஆயிரம் கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கால்நடைகளிலிருந்து ஆண்டிற்குச் சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பலனும், வருவாயும் நமது நாட்டிற்குக் கிடைக்கிறன. இது நமது நாட்டின் மொத்த தேசிய வருவாயில் 10 சதவீதம் ஆகும்.

தற்சமயம் ஆண்டிற்கு 50 மில்லியன் டன் பால் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனுடைய மதிப்பு 20 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். விவசாயப் பணிகள் மற்றும் வண்டிகள் மூலம் பாரம் இழுப்பது போன்ற பணிகளையும் நமது கால்நடைகள் செய்கின்றன. இந்த பணிகளின் மதிப்பு ஆண்டிற்கு 10 ஆயிரம் கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. கால்நடைகளிலிருந்து கிடைக்கும் எருவின் மதிப்பு 10 ஆயிரம் கோடி ரூபாய், இறைச்சியின் மதிப்பு 6 ஆயிரம் கோடி ரூபாய். தோல், தோல் பொருட்களின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாய். முட்டைகளின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாயாகும்.

உழவுத் தொழிலுக்கும் மற்றும் பாரம் இழுப்பதிலும் கால்நடைகள் முக்கியப் பணியாற்றுகின்றன. இந்தப் பணிகளில் 7.2 கோடி எருதுகள், 20 இலட்சம் பசுக்கள், 80 இலட்சம் எருமைகள், 20 இலட்சம் ஒட்டகங்கள் மற்றும் குதிரைகளும் ஆக மொத்தம் 8.4 கோடி கால்நடைகள் பயன்படுத்தப் படுகின்றன. இந்தக் கால்நடைகளின் மதிப்பு மட்டும் 15 ஆயிரம் கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.





நமது நாட்டில் 1.5 கோடி கட்டை வண்டிகள் உள்ளன. இவற்றின் மதிப்பு 4 ஆயிரம் கோடியாகும். இந்த மாட்டு வண்டிகளை நம்பி 2 கோடி பேர் வாழ்கிறார்கள். இந்த வண்டிகள் மூலம் ஓர் ஆண்டில் 25 ஆயிரம் மெட்ரிக் டன் கிலோ மீட்டர் பாரங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வதெல்லாம் இந்த நாட்டின் பொருளாதாரத்திலும், முக்கியத் தொழிலான விவசாயத்திலும், மக்களின் வாழ்விலும் கால்நடைகள் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். மேலும், கால்நடை வளர்ப்பு மிகவும் இலாபகரமானது என்பதையும் அறியலாம்.

இத்தகைய சிறப்பு மிக்க, நமது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கக்கூடிய கால்நடை வளர்ப்புத் தொழிலில் பல பிரச்சினைகள் உள்ளன. பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை அறிந்து அவற்றிற்குத்தகுந்தபரிகாரம் காண்பதால் நமது கால்நடைகளிலிருந்து அதிகபட்ச வருவாய் பெறலாம். இன்றைய நிலையில் கால்நடை வளர்ப்பில் முக்கியப் பிரச்சினையாக விளங்குவது தீவனப் பற்றாக்குறையே.

உதாரணத்திற்கு, தமிழ்நாட்டின் நிலையை ஆராயலாம். 2.5 கோடி கால்நடைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்தக் கால்நடைகளிலிருந்து அதிகபட்ச பலனும் வருவாயும் பெற ஆண்டிற்கு 100 மில்லியன் டன் தரமான தீவனம் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், தற்சமயம் தமிழ்நாட்டில் 30 மில்லியன் டன் தீவனம் தான் கிடைக்கிறது. பெரும்பாலும் தரக் குறைவான வைக்கோல் மற்றும் தட்டு போன்ற தீவனமே அதிகமாக உள்ளது.

நமது கால்நடைகளுக்குத் தேவைப்படும் தீவனம், அளவிலும் தரத்திலும் மிகவும் குறைவாக உள்ளது. நமது நாட்டில் கால்நடை வளர்ப்பில் இதுவே ஒரு பெரிய பிரச்சினையாகும். தேசிய வேளாண்மைக் குழுவின் அளவுகோல் மற்றும் பரிந்துரையின்படி நமது நாட்டில் வேளாண்மைக்குப் பயன்படும் நிலத்தில் 7.34 சதவிகிதம் நிலப் பரப்பு கால்நடைத் தீவனத்திற்கு என்று ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், நடைமுறையில் அதில் பாதி பரப்பளவில் கூட கால்நடைத் தீவனம் சாகுபடி செய்யப்படுவதில்லை. நமது அரசும், விவசாயிகளும், சம்பந்தப்பட்ட துறைகளும் போதுமான அளவு தரமான கால்நடைத் தீவனங்களை உற்பத்தி செய்வதற்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து நடைமுறை சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது இன்றைய நிலையில் அவசரமும் அவசியமுமான செயலாகும்.

கால்நடைத் தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யத் திட்டமிடுகையில் இரண்டு விஷயங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒன்று மாறுபட்ட, மேம்படுத்தப் பட்ட அதிக உற்பத்தித் திறனுள்ள



கால்நடைகளுக்கு ஏற்ப புரதச் சத்து மிக்க தரமான பசுந் தீவனம் அதிகம் சாகுபடி செய்ய வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நமது கால்நடைகளின் உற்பத்தித் திறன் எல்லா வகையிலும் குறைவாகவே இருந்தது. பால் உற்பத்தியைக் காட்டிலும் உழவுத் தொழில் பணி களை மேற்கொள்ளவும், நில வளத் திற்கு வேண்டிய எருவிற்காகவும் தான் முன்பு மாடுகளுக்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டது. நமது கறவை மாடுகள் தினமும் சராசரி யாக ஒன்றிலிருந்து ஒன்றரை லிட்டர் பால் மரபியல் திறன் (Genetical capacity) கொண்டதாக இருந்தது. ஆனால், இன்று ஒரு நாளைக்கு 10 லிட்டருக்கும் கூடுத லான பால் வழங்கும் கறவை மாடு களை நாம் காண்கிறோம்.

மாராட்டிய மாநிலம் புனாவிற்கு அருகில் உருளிகாஞ்சலில் உள்ள (Baif) (பெய்ப்) நிறுவன பால் பண்ணையில் ஒரு ஹோல்ஸ்டன் பிரிஷியன் ஒரு நாளில் 62.5 லிட்டர் பால் வழங்கியது. இதுவே நமது நாட்டில் பால் உற்பத்தியில் முதல் பரிசு பெற்ற பசுவாகும்.

இந்த அளவிற்கு நமது கால்நடை களின் உற்பத்தித் திறன் நாளுக்கு நாள் உயர்ந்து வரும் நிலையில் அதற்கு ஏற்றாற்போல் புரதச் சத்து மற்றும் வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்த பசுந் தீவனத்தை அதிக அளவில் சாகுபடி செய்து நமது கால்நடைகளுக்கு வழங்குவது அவசிய மாகும்.

பருவ மழை பெய்வது அடிக்கடி தவறி வறட்சி நிலை அதிகமாக நீடிப்பது, நாளுக்கு நாள் தரிசு நிலங்கள் எல்லாம் விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதும், கால்நடைகள் தீவன உற்பத்திக்குப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இந்த யதார்த்த நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் கால்நடைத் தீவன உற் பத்திக்குத் திட்டமிட வேண்டும்.

வழக்கமாக இதுவரை நாம் சாகு படி செய்து வரும் கினியாபுல், கோ.1, எருமைப்புல், குதிரை மசால் போன்ற தீவனப் பயிர் களைச் சாகுபடி செய்வதிலும் இன் றைய வறட்சி நிலையாலும் போது மான நீர்ப்பாசன வசதியில்லாமை யாலும் சிரமமாக உள்ளது.



இன்றைய நிலையில் நீண்ட கால வறட்சியைத் தாக்குப்பிடிக்க கூடிய தும், ஒரு முறை நட்டு வளர்த்து விட்டால் பல ஆண்டுகள் வெட்ட வெட்ட மீண்டும் மீண்டும் தழைத்து நீண்ட காலம் பலன் கொடுக்கக் கூடியதும், குறைந்த பட்சத் தண்ணீர் மற்றும் மழையைக் கொண்டு வளரக் கூடியதும், விவசாயத்திற்குப் பயன் படாத வளமற்ற நிலத்திலும் வளரக் கூடியதும் அதே சமயம் கால்நடைகளுக் குத்தீவனம் வழங்கக்கூடியது மாகிய மரங்களைச் சாகுபடி செய்வதே சரியான அணுகுமுறையாகும்.

இந்தக் குறிக்கோளுடன் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு சுபாபுல் என்ற தீவன மரம் நமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று இந்த மரம் பரவலாகச் சாகுபடி செய்யப்பட்டு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் இந்த சுபாபுல் தேவை யான அளவிற்கும் சாத்தியமான அளவிற்கும் சாகுபடி செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை. இன்னும் அதிக அளவில் சாகுபடி செய்து நமது கால்நடைகளுக்குத் தீவன மாகப் பயன்படுத்த வேண்டும்.

கிளிரிசிடியா என்ற மரத்தின் இலைகளையும் கால்நடைத் தீவன மாகப் பயன்படுத்தலாம் என்று சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதன் இலைகளில் 27 சதவிகிதம் புரதமும், 2 சதவிகிதம் கால்சியமும், மற்றும் வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்தும் மிகுந்துள்ளது. இதனைக் கறவை மாடுகளுக்குத் தீவன மாகப் போடுவதால் பால் உற்பத்தி கணிசமாகக் கூடும். பருத்திக் கொட்டை, புண்ணாக்கு, தவிடு, கலப்புத் தீவனங்கள் செலவு குறை கிறது. ஒட்டுமொத்தமாகப் பால் உற் பத்தித் தொழிலில் இலாபம் கணிச மாகக் கூடுகிறது.

இந்த கிளிரிசிடியா மரம் நமது விவசாயிகளுக்குப் புதியதல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பே பசுந்தாள் உரத்திற்கென்று, நில வளத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மரம். நீண்ட வறட்சியைத் தாக்குப் பிடித்து உயிர் வாழக் கூடியது இந்த மரம்.

ஒரு முறை நட்டு வளர்த்து விட்டால் இதன் கிளைகளை வெட்ட வெட்ட மீண்டும் மீண்டும் தழைத்து நீண்ட காலம் பலன் கொடுத்துக் கொண்டே இருக்கும். இதனைச் சாகுபடி செய்வதோ மிகவும் சுல பம். இதன் கிளைகளைப் பதியமாக நட்டு மரமாக்கலாம். விதையை நட்டும் வளர்க்கலாம்.

வேறு எந்த விவசாயப் பயிரோ, தீவனப் பயிரோ சாகுபடி செய்யப் பயன்படாத களர் நிலங்களிலும், வளமற்ற நிலங்களிலும் கிளிரிசிடியா வளரக் கூடியது. இதனையெல்லாம் கருத்தில் கொண்டு கால்நடைகளின் தீவனத்திற்குக் கிளிரிசிடியா மரத் திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இதனை அதிக அளவில் சாகுபடி செய்யவும், தீவனமாகக் கால்நடை களுக்குப் பயன்படுத்தப்பட்ட முயற் சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்கள் இந்த கிளிரிசிடியாவைத் தீவன மரமாக அங்கீரித்து இதனை விவசாயிகள் மத்தியில் பிரபலபடுத்தும்படி துறை யில் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளார். இவ் விஷயத்தில் தமிழ்நாடு இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டி யாக விளங்குகின்றது.

இன்னமும் இது போன்று தீவன மாகப் பயன்படக்கூடிய இலைகளை வழங்கக் கூடிய பல மரங்களையும் கண்டுபிடித்துப் பயன்படுத்தலாம். இந்தப் புதிய அணுகுமுறையே அதாவது தீவன மரங்களுக்கு முக் கியத்துவம் கொடுப்பதே இன்றைய நிலையில் கால்நடைத் தீவனப் பற்றாக்குறையைப் போக்குவதற்குச் சிறந்த வழியாகும்.

# நூல் நயம்

### செந்தமிழ் இன்பம்

**ஆசிரியர்:** கவிஞர் பெ. வரதராசன்

**வெளியீடு:**

தேன்மொழிப் பதிப்பகம்
2-83 A கொழுந்தம்பட்டு அஞ்சல்,
சம்புவராயர் மாவட்டம் 606 706.

பக்கம்:88 விலை:ரூ.10/-

மரபுக் கவிதை மலர்களால் உரு வாக்கப்பட்டுள்ள இலக்கிய மாலை இந்நூல். இதில் இடம் பெற்றுள்ள இருபது கவிதைகளும் இனிமையின் உறைவிடமாகத் திகழ்கின்றன. செந் தமிழின் பெருமை குறித்துப் பாடப் பெற் றுள்ள கவிதைகள் நமது சித்தத்தை மகிழ்விக்கின்றன.

சிலம்பு தரும் பத்தினிகள், புகழ் பெற்றாள் மருதி ஆகிய கவிதைகளில் நயம் கொழிக்கிறது. நல்ல தமிழ் கொலு வோச்சுகிறது. மொத்தத்தில் செந்தமிழ் இன்பம் என்னும் இக்கவிதை நூல் நமது உள்ளத்திற்கு இன்பம் அளிக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

### புதிய அறம்கூற வந்தோர்

**ஆசிரியர்:** டாக்டர் மா.பா. குருசாமி

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை-20

பக்கம்:100 விலை:ரூ.10/-

வாழ்க்கை வரலாறுகள், வாழ்ந்து மறைந்த பெரியோர்களின் வாழ்க்கைச் சுவடுகளை நமக்குக் காட்டுவன. தன்னம் பிக்கை, விடா முயற்சி, உழைப்பு முத லான தன்மைகளோடு நாட்டுப்பற்று, தியாகம், வீரம் முதலானவற்றையும் எடுத்துக்காட்டுவன. அவை படிப்போருக் குப் படிப்பினை மட்டுமன்று, படிப்படி யாக உயரவும் வழிகாட்டும். அந்த வகை யில் இந்த நூலில் 14 தேசத் தலைவர் களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, திலகர், வ.உ.சி., பாரதியார் இப்படிப் பல தலைவர்கள் இந்த நூலிலே பேசப்படுகிறார்கள்.

—'பூங்கொடி'

### நாடகச்சோலை

**ஆசிரியர்:** மா. அய்யாசாமி

**வெளியிட்டோர்:**

மங்கை இல்லம்
75, என்.ஜி.ஓ. காலனி
திருவள்ளூர்-602 001.
செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்

பக்கம்:140 விலை:ரூ.12/-

இந்தியத் திருநாட்டின் பண்பாட்டை யும், பெருமைகளையும் விளக்கவல்ல வீரவரலாறுகள் சிலவற்றை, சரித்திரங் களில் இருந்தும், இதிகாசப் புராணங் களில் இருந்தும் எடுத்து நாடகமாக்கி யுள்ளார் ஆசிரியர். இளம் மாணவ மணிகள் தெள்ளெனப் புரிந்து கொள்ளும் வகையில் ஆக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த நாடக நூல்.

### ஒரே வானம் ஒரே நிலவு

**ஆசிரியர்:** பி.வி. கிரி

**வெளியீடு:**

திருமலைப் பதிப்பகம்,
பிளாக். N-385,
அறிஞர் அண்ணாநகர் கிழக்கு,
சென்னை-600 102.

பக்கம்:112 விலை:ரூ.14/-

குழந்தைகளுக்காக எழுதப்பட்ட ''ஒரே வானம் ஒரே நிலவு'' என்னும் நூல் 12 சிறுகதைகளைக் கொண்டதாக உள்ளது. இந்நூலிற் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு கதையும், வெவ்வேறு நீதி போதனையை நமக்குப் போதிக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் வண்ணம் ஆசிரியர் கதைகளை எழுதி யிருப்பது இந்நூலின் ஒரு தனிச் சிறப் பாகும்.

அட்டைப்படம் கண்ணைக் கவர்கிறது. ஒவ்வொரு கதைக்கும் ஒவ்வொரு படமும், கதை முடிவில் கையிலேந்திய தீபமும் அமைந்திருப்பது நூலுக்கு எழிலூட்டு கிறது. பள்ளி மாணவர்க்கேற்ற நூல்.

—தே. மணி

### 'ஆனந்த வடிவு'

**ஆசிரியர்:** சு. போசு.

**வெளியீடு:**

பதிப்பாளர். துரை இராமு
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம்,
சென்னை-600 045.

பக்கம்:42 விலை:ரூ.5/-

'ஆனந்த தீர்த்தம்' என்னும் கிராமத் தில் நடைபெறும் கதைதான் ஆனந்த வடிவு.

ஆசிரியர் தனது வர்ணனைகளைக் குறைத்துக் கொண்டு, சொல்வதை நறுக்குத் தெறித்தாற்போல் சொல்லி யிருந்தால் கதையின் வேகம் சற்றுக் கூடியிருக்கும். பொதுவாக, படிக்கலாம்.

- குமார்.

### இயற்கைக் கோள்களும் செயற்கைக் கோள்களும்

**ஆசிரியர்:** மனோகரன்

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்,
92, கங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.12.50/-

விண்வெளி விந்தை மிக்கது. விஞ் ஞான வளர்ச்சியின் மூலம், வியப்பான செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக் கின்றன. அத்தகைய செய்திகளைத் தொகுத்துத் தருகிறது இந்நூல்.

நட்சத்திரங்கள், சூரியன், கோள்கள், பூமி, சந்திரன் ஆகியவை குறித்தும், செயற்கைக் கோள்கள் குறித்தும் விளக்க மாகத் தரப்பட்டிருக்கிறது. பள்ளி மாண வர்க்குப் பயனுள்ள நூல்.

### அழிவுற்ற வாழ்வு

**ஆசிரியர்:** ஜெ.சி. குமரப்பா

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை.

பக்கம்:150 விலை:ரூ.16/-

கதர், கிராமத் தொழில்களின் ஆக்கத் திற்கும் மேம்பாட்டிற்கும் தொண்டாற்றிய இந்நூலாசிரியரின் இந்த நூலுக்கு அண்ணல் காந்தியடிகள் போற்றத்தக்க வகையில் முன்னுரை வழங்கியுள்ளார்.

டாக்டர் குமரப்பா அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டில் காந்திய இலக்கியச் சங்கத்தினர் இந்நூலை வெளி யிட்டுள்ளனர்.

இந்நூல் இரண்டு பாகமாக உள்ளது. முதல் பாகம் தனிமனித வாழ்க்கையை யும், இரண்டாம் பாகம் மக்களின் கூட்டு வாழ்க்கையையும் ஆராய்கிறது.

### குழந்தை வளர்ப்பு

**ஆசிரியர்:** டாக்டர் திருஞானம்

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,
சென்னை-600 098.

பக்கம்:415 விலை:ரூ.50/-

ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய அருமையான குழந்தை வளர்ப்பு நூல் இது. குழந்தை பிறப்பதற்கு முன் பிருந்தே செய்ய வேண்டியவை பற்றியும், பிறந்த பின் பேணி வளர்க்கும் முறை பற்றியும், சத்துணவு, வைட்டமின்கள், குழந்தைக்கு வரும் நோய்கள் பற்றியும், அவர்தம் மனோபாவங்கள் பற்றியும் தெளிவாக எழுதப்பட்ட நூல்.

—சுகுமாரன்

# சென்னைப் பல்கலைக்கழகம் அன்றும் இன்றும்

**பேராசிரியர் டாக்டர் சே. சாதிக்**
**துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்**

**1857**-ஆம் ஆண்டின் இந்திய மேலவைச் சட்டம் வாயிலாக பம்பாய், கல்கத்தா, சென்னைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. இந்தச் சட்டத்திற்கு அடிப்படையாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் 1854-ஆம் ஆண்டு அறிக்கை அமைந்தது. தொடக்கத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் நன்கு வளர்ந்த கல்லூரிகள் இணைக்கப்பட்ட நிலையில் தேர்வு நடத்தும் நிறுவனமாக மட்டுமே செயல்பட்டு வந்தது. 1923-ஆம் ஆண்டுச் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி ஆய்வு புரிதல், பயிற்றுவித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பல்கலைக்கழகமாக உருவெடுத்தது. மேலும் ஆய்வு நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிக்கும் நிலையினையும் எய்தியது.



தென்னிந்தியா முழுவதையும் தனது கல்வி ஆளுகைக்குள் கொண்டிருந்த சென்னைப் பல்கலைக்கழகம் தென்னகத்தில் புதிய பல்கலைக் கழகங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்கியது. 1916-இல் மைசூர்ப்பல்கலைக்கழகம், 1918-இல் உசுமானியாப் பல்கலைக்கழகம், 1926-இல் ஆந்திரப் பல்கலைக் கழகம், 1929-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1937-இல் திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம் (இது 1957-இல் கேரளப் பல்கலைக் கழகமாயிற்று), 1954-இல் திருவேங்கடவன் பல்கலைக்கழகம், 1966-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1971-இல் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஆகியன தோன்றின. அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் (1978), தமிழ்ப் பல்கலைக்கழகம், (1981), பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்கள் (1982) ஆகியன அண்மையில் தோன்றிய பல்கலைக்கழகங்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தின் (திருத்தச்) சட்டம் 1966-இன் படி, திருச்சி, கோவை நகர்களில் இப் பல்கலைக்கழகத்தின் பட்டமேற் படிப்பு விரிவாக்க மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை 1976-77-இல் தன்னாட்சி மையங்களாக வளர்ச்சியுற்றுப் பின் பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களாக 1982-இல் வளர்ச்சியுற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தலைமையகம் சேப்பாக்கத்தில் 1879-இல் அமைந்தது. அப்போது பேரவைக் கட்டடம் ஒன்று அழகுறக் கட்டப்பட்டது. இக்கட்டடத்தில் பல்கலைக்கழக நூலகம், அலுவலகங்கள், ஆராய்ச்சித்துறைகள் ஆகியன இடம் பெற்று நீண்ட காலம் செயல்பட்டு வந்தன. நூறு வயதைக் கடந்த இந்தக் கட்டடம் பல்கலைக்கழகத்தின் மையப்பகுதியில் அமைந்த முதல் கட்டடம் மட்டுமன்று; பண்டைக் கட்டடக் கலையின் பெருமையினைப் பறைசாற்றும் கட்டடம் மட்டுமன்று; இந்திய நவீனக் கல்வியின் தோற்றுவாயைக் குறிக்கும் வரலாற்றுச் நினைவுச் சின்னமும் ஆகும். இக் கட்டத்தைச் புதுப்பித்து அறிவியல் அருங்காட்சியகம் ஒன்றை விரைவில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொன்மையான துறைகள் இந்திய வரலாற்றுத் துறையும் பொருளியல் துறையும் ஆகும். பிற துறைகள் அவ்வப்போது தோற்றுவிக்கப்பட்டு இப்போது 68 துறைகள் சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி ஆகிய நான்கு வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. பயிற்றுவித்தல், ஆய்வு புரிதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன உலகத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பவும், வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைக்கு ஏற்பவும் பல்கலைக்கழகத் துறைகளும் பாடப் பிரிவுகளும் பலவாறாகப் பகுக்கப்பட்டுச் சிறந்த முறையில் உயர் கல்விப்பணி பல்கலைக்கழகத்தில் ஆற்றப்பட்டு வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம் தனது தரமான கல்விப்பணியினைப் பொதுமக்கள் நலன் கருதி மேலும் பரவலாக்கியுள்ளது. அஞ்சல்வழிக் கல்வி, பணிநோக்குடைய சார்புத் தொழிற்கல்வி ஆகியன இவ்வகையின. 1981-இல் தொடங்கப்பெற்ற அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம் 1981-82-இல் 28,000 மாணவர்களைக் கொண்டிருந்தது. ஆண்டுக்காண்டு மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டில் 68,000 ஆடவரும், 45,000 மகளிரும் அஞ்சல் வழியாகப் பயின்று வருகின்றனர்.

சென்னைப் பல்கலைக்கழகம் 113 இணைப்புக் கல்லூரிகளையும் 7 ஏற்புக் கல்லூரிகளையும் கொண்டுள்ளது.

# பொற்காலம்





## மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்

**கலைகளிலும் செல்வ நிலைகளிலும் உயர்ந்திருந்த காலத்தைப் பொற்காலம் என்பது உலக வழக்கு. அது உருவகமாக உரைக்கப்பட்ட பெயர் உண்மையிலேயே, பொன்னையே மிகுதியாகப் பயன்படுத்திய காலம் தமிழர்க்கன்றி வேறு எவர்க்கும் இருந்ததில்லை. அந்தப் 'பொற்காலத்தை'ப் பற்றிய அரிய செய்திகளை இக்கட்டுரை வழங்குகிறது.**

தமிழர் வரலாற்றுக் காலப் பகுதிகளுள், பழங்கற்காலம், புதுக்கற்காலம் என்னும் இரண்டும் அவ்வக் காலத்தோடு முடிந்து போனவையாகும். பழங்கற்காலக் கருவிகள் புதுக்கற் காலத்திலும் புதுக்கற்காலக் கருவிகள் பெரும்பான்மையாகப் பொற்காலத்திலும் வழங்கியிரா. ஆயின், பொற்காலம் முதலிய பிற்காலக் கருவிகள் உலகுள்ள காலமெல்லாம் வழங்கும்.

பொற்காலம் செம்புக் காலம் உறைக்காலம் இரும்புக் காலம் எனப் பிரித்ததெல்லாம், பெரும்பாலும் அவற்றின் பயன்பாட்டுத் தொடக்கம் பற்றியேயன்றி முடிவு பற்றியன்று. ஆயினும், முடிவு குறிக்கப்பட்டிருப்பது, அவ்வக்காலத்து மாழை பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்ட காலத்தின் முடிவைக் குறித்ததற்கே என அறிக.

பொன் அணிகலத்திற்கும், செம்பும் உறையும் (வெண்கலமும்), குடவமும் (பித்தளையும்) நீர்க்கலத்திற்கும், இரும்பு எல்லாக் கருவிகட்கும், என்றும் பயன்படுத்தப்படும். இவற்றுள், பொன் மிகச் சிற்றளவாகவும் இரும்பு மிகப் பேரளவாகவும் இருக்கும்.

பொற்காலம் என ஒன்று தமிழகம் தவிர வேறெந்த நாட்டிற்கும் இருந்ததில்லை. பிற நாடுகளிலெல்லாம் பொற்காலம் என்பது, அணியியற் பொருளில், ஒழுக்கத்திலும் செல்வத்திலும் கல்வியிலும் தலைசிறந்த காலத்தைக் (Golden Age)

குறிக்குமேயன்றி, செஞ்சொற்பொருளில் பொற்கருவிகளே வழங்கிய காலமொன்றைக் குறிக்காது. தமிழ்நாட்டிலுள்ள பல்வகைத் தனிச் சிறப்புகளுள் பொற்காலமும் ஒன்றாகும். பொலிவுற்றது பொன்னெனப்பட்டது. பொல்-பொலி-பொலிவு. பொல்-பொற்பு. பொல்லுதல்-அழகாதல், பொலிதல். பொற்ற-அழகிய, சிறந்த, பொன்னாலான, பொல்-பொன், பொல்- பொலம்-பொலன்.

குமரிநாட்டிற் பொற்காலமிருந்தமைக்குச் சான்றுகளாவன:

(1). பொன்னின் பெயர் - மாழைப்பொதுப் பெயரானமை.

தமிழரால் முதன் முதற் கண்டுபிடிக்கப்பட்ட மாழை (Metal) பொன்னாதலால், அதன் பெயரே பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிறவற்றிற்கும் பொதுப்பெயராயிற்று.

எடுத்துக்காட்டு: செம்பொன்-செம்பு. வெண் பொன்-வெள்ளி.

கரும்பொன்-இரும்பு.

'தூண்டிற்பொன் மீன்விழுங்கியற்று' என்னுங் குறளடியில் (931), பொன் என்னுஞ் சொல் அடையின்றியும் இரும்பைக் குறித்தது. நாக(இய) மணல் பொன்வித்து எனப்படும்.

(2). கடைக்கழகக் காலத்திலும் பொன் மிகுதி யாக வழங்கினமை.

அக்காலத்துக் காசெல்லாம் பொன் மிகுதியாக வழங்கினமை.

அக்காலத்துக் காசெல்லாம் பொன்னாயிருந் தமையால், காசு பொன் என்றும், பணமுடிப்பு பொற்கிழி என்றும், பணத்தண்டம் பொன் தண்டம் என்றும், சொல்லப்பட்டன. அரசர் தம்மைப் பாடிய புலவர்க்கு இலக்கக்கணக்கிற் பொற்காசை வாரி வழங்கினர். கடியலூர் உருத்திரங் கண்ணனார் கரிகால் வளவனைப் பாடிப் பதினாறிலக்கம் பொன் பெற்றார். காப்பியாற்றுக் காப்பியனார் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைப்பாடி, நாற்பதிலக்கம் பொன் னும் அவன் ஆண்டதிற் பாகமும் பெற்றார். காக்கைபாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைப் பாடி, அணிகலனுக் கென்று ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பெற்றார். கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடி ஓரிலக்கம் பொற்காசும் ஒரு நாடும் பெற்றார். அரிசில்கிழார் தகடூரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறையைப் பாடி, தொண்ணி லக்கம் (ஒன்பது நூறாயிரம்) பொற்காசும் அரியணைக் கீடாக அமைச்சுரிமையும் பெற்றார். பெருங்குன்றூர்க்கிழார் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடி, முப்பத்தீராயிரம் பொற்காசும் பல்வகைப் பரிசிலும் பெற்றார்.

மாதவி போல தன் ஆடல்பாடலை அரங் கேற்றிய நாடகக் கணிகைய ரெல்லாரும், ஆயிரத் தெண் கழஞ்சு பொன் பெற்றனர். அரசரை



யடுத்துப் பாடிய பாணரெல்லாரும் பொற்றாமரை யும், பாடினியரெல்லாரும் பொன்னரிமாலையும், பரிசாகப் பெற்றனர்.

பொன் கிடைக்கும் வகைகள், தூள் (Dust), மணல் (Grain), தகணை (Nugget), நரம்பு (Lode or Vein), கலப்பு (Mixture) என ஐந்து.

1850-இல் ஆத்திரேலியப் பொன் கண்டு பிடிக்கப்பட்டபின், பொற்பித்தர் பெருந்திரளாகப் போய் அங்குச் சரிந்தனர். பலவிடத்திற் பெருந் தகணைகள் நிலமட்டத்திற்கு ஒரு சில விரலங் கட்குக் (Inches) கீழேயே கண்டெடுக்கப்பட்டன. 'அரம்ப மலை மணல்' தகணை ('Sierra Sands' nugget) 1,117 விரனையும் (oz), 'ஆத்தம் பெரு மாட்டி' (Lady Hotham) 1,177 விரனையும், 'நல்வரவு அயலார்' தகணை (Welcome Stranger Nugget), 2,000 விரனைக்கு மேலும், 'ஆலதர்மன் தகணை' (Holtermann Nugget) 200 துலத்திற்கு (lb.) மேலும் எடை நின்றன.

குமரிக்கண்டம் ஆத்திரேலியாவோடும் தென் ஆப்பிரிக்காவோடும் இணைந்திருந்ததனால், அந் நடுவிடத்திலும் பொற்றகணைகள் எளிதாய்க் கிடைத்திருத்தல் வேண்டும்.

முழுகிப் போன குமரிக் கண்டத்தைச் சேர்ந்த தமிழ் நிலம் முழுவதும் பழம் பாண்டி நாடாகும். சோழ நாட்டின் வடபகுதி தொண்டை மண்டலம் என்று பிரிந்தது போன்றே, சேரநாட்டின் வடபகுதியும் கொங்கு மண்டலம் எனப் பிரிந்தது. அக்கொங்கும் பின்னர்க் குடகொங்கு குண கொங்கு என இருபாற்பட்டது. கொங்கு நாட்டி லும் சோழ நாட்டிலும் ஓடும் பேராறு காவேரி. அக்காவேரி பொன் கலந்த மணலைக் கொழித்த தனாற் பொன்னியெனப்பட்டது.

சோழ நாட்டில் மிகுதியாகப் பொன் கிடைத்த தனால், முதற் பராந்தகன், இரண்டாங் குலோத் துங்கன் முதலிய சோழவேந்தர் பலர் தில்லைச் சிற்றம்பலம் பொன் வேய்ந்தனர். இரண்டாம் இராசராசன், சிற்றம்பலம் மட்டுமின்றிப் பேரம் பலம் மாடமாளிகை கூடகோபுரம் முதலிய பலவற்றையும், பொன்னா லணிவித்துத் தில்லை யைப் பொன்வண்ண மாக்கினான்.

'சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பலபல மண்டபமும்-சுற்றிய
மாளிகையும் பீடிகையும் மாடமுங் கோபுரமும்
சூளிகையு மத்தெருவுந் தோரணமும்-ஆளுடையான்
கோயில் திருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயில் திருச்சுற்று மாளிகையும்-தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பறுத்து
முன்னிற் கடல்களுள் சூழ்குவித்த சென்னி'

- இராசராச தேவருலா.

அரண்மனைகளில் அரசன் தங்கும் தனி மாளிகையும் பொன்னால் வேயப்பட்டிருந்தது சுந்தரச் சோழனைப் 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்' என்று கல்வெட்டுக் கூறுதல் காண்க.



யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.

கொங்கு நாட்டிற் கிடைத்த பொன் கொங்குப் பொன் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டது. இன்றும் சுரங்கத்திற் பொன்னெடுக்கும் குவளாலபுரம் (கோலார்) பண்டைக் கொங்குநாட்டைச் சேர்ந்ததே.

'கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரோடு நின்றோர் ஏர்மங் கலமும்'

என்னும் சிலப்பதிகார நாடுகாண் காதை யடிகட்கு (132-5)

'செந்நெற் கதிரோடே அறுகையும் குவளையை யும் கலந்து தொடுத்த மாலையை மேழியிலே சூட்டிப் பாரை இரண்டாகப் பிளப்பாரைப் போலப் போற்றுவார் தொழப் பொன்னேர் பூட்டி நின்றோர் ஏரைப் பாடும் ஏர்மங்கலப் பாட்டு மென்க'. என்று அடியார்க்கு நல்லார் உரை வரைந்துள்ளார்.

உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னி பொற் றேரை யுடையவனாயிருந்தான்.

'பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கடல் நிவந்ததெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ'

(புறம்.4)

என்று பரணர் பாடுதல் காண்க. பண்டைத் தமிழரசரின் தேர், குதிரை, யானைகள் பொற் படைகளால் அணிசெய்யப் பெற்றிருந்தன.

'மகிழா தீத்த இழையணி நெடுந்தேர்'
- (புறம். 123:4)

'பாடிப் பெற்ற பொன்னணி யானை'
புறம். 177:3

'வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வோரே:'
(புறம்.116)

அரசருடைய போர் முரசும் அதுபோன்ற பிற சின்னங்களும் பொன்னால் அணி செய்யப் பட்டிருந்தன.

'பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுறுகெழு முரசம்'
(புறம்.50).

கி.மு. 11-ஆம் நூற்றாண்டிற்கும் 10-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் யூதேயா நாட்டை யாண்ட சாலொமோன் அரசன் (1015-975), ஒப்பீர் (Ophir) என்னும் இந்தியத் துறைமுகத் தினின்று வருவித்த பொருள்களுள் பொன்னும் ஒன்று. அத்துறைநகர், வேம்பாய் எனப்படும் பம்பாய் மாநகர்க்கு வடக்கே 37 கல் தொலை விலிருந்த, உப்பரா அல்லது உப்பரகா என்று ஆராய்ச்சியாளரால் கருதப்படுகின்றது. காலடு வெலார் அது ஒருகால் பாண்டி நாட்டின் கீழ்க் கரையிலுள்ள உவரியாயிருக்கலாமென்று கருதி னர். எதுவாயினும், ஒப்பீர் ஓர் இந்தியத் துறைநகர் என்பது உறுதி. சாலொமோன் காலத்திற் சேரநாடு குச்சரம் (குச்சராத்து) வரை பரவியிருந்தது.

தொன்று தொட்டுப் பொன் இந்தியாவினின்று மேனாடுகட்கு ஏராளமாக் ஏற்றுமதியாகி வந்த தனால், சேக்கசுப்பியர் (Shakspeare) தம் 'பன்னி ரெண்டாம் இரவு' (Twelth Night) என்னும் நாடகத்தில், பொன்னை 'இந்திய மாழை' (Metal of India) என்றார். (2:5)

(4) குமரிநாட்டில் பொன் கிடைத்தமை பற்றிய நெட்டிமையார் கூற்று:

'..........................................தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'.
(புறம்.9).

இதன் பழையவுரை: 'தம்முடைய கோவாகிய சிவந்த நீர்மையையுடைய, பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய முந்நீர்க் கடற்றெய்வத்திற் கெடுத்த விழாவினையுடைய நெடியோனா லுள்தாக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளி யென்னு மாற்றின் மணலினும் பல காலம்.'

குறிஞ்சியிலும் முல்லையிலும் பெரும்பாலும் பாலும் சூட்டிறைச்சியுமே உண்டதனால், அவ் வுணவிற்கு உவர்ப்புப் பொருள் தேவையில்லா திருந்தது. முல்லை நிலத்தில் தினை வரகு சாமை முதலியவற்றின் அரிசியைப் பாலிலுஞ் சமைத்திருக்கலாம். மருத நிலத்திற்கு வந்தபின்பே சிறந்த முறையில் சமையல் தொடங்கியதால், பொங்கல் புழுங்கல் அவியல் சுண்டல் துவட்டல் புரட்டல் துாய்ச்சல் பொரியல் முதலிய வினை களை நீரிற் செய்தற்கு, உவர்ப்புச் சரக்குச் சேர்க்க வேண்டியதாயிற்று. உப்பு விளைக்கும் உவர்நீர்க் கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தை அடுக்குமுன், உமணையே பயன்படுத்தியிருத்தல் வேண்டும். உமண் என்பது உவர்மண். அதை முதலில் விற்றவர், பின்பு நெய்தல் நிலத்து உப்பளத்தில் உப்பு விளைத்த போதும், உமணர் எனப்பட்டனர்.

'களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்'
(நாலடி. 133)

பொரியல் முதலில் ஆவின் நெய்யிலேயே செய்யப்பட்டது. அதனாலேயே, பின்னர் எள்ளி லிருந் தெடுக்கப்பட்ட நெய்ப் பொருள் எண்ணெய் (எள்நெய்) எனப் பெயர் பெற்றது. எள்ளின் நெய்யே முதற்காலத்திற் பெருவழக்காக வழங்கின தினால், பிற்காலத்தில், ஆவின் நெய் தவிர மற்றெல்லா நெய் வகைகட்கும் எண்ணெய் என் பது பொதுப் பெயராயிற்று.

சமையற்கு வேண்டிய நெருப்பு, நாள்தொறும் ஞெலிகோலால் விரைந்து கடையப்பட்டது. அது வீடுதொறும் இறவாணத்திற் செருகப்பட்டிருந்தது. குறிஞ்சி வாணரும் முல்லை வாணரும் வேட்டைக் காரரும், அதை என்றுங் கையில் வைத்திருந்தனர்.

'இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போல'
(புறம். 315:4).

'கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து'
(புறம்.247:2).

'புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியுங்
கல்லா விடையன் போல'
(புறம். 331:4).

'செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதன னெழுவேற் கைகவித் திரீஇ

---

## மதுவிலக்குப் பிரச்சாரம்



★ மதுவிலக்குத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றுவதும் - உரிய முறையில் பிரச்சாரம் செய்வதும் தேவையாகும். மதுவினால் ஏற்படக்கூடிய கேடுகளை விளக்கவும், சம்பந்தப்பட்ட மக்களுடன் தொடர்பு கொண்டு நல்லமுறையில் அறிவுரைகளைக் கூறவும், மதுவிலக்குச் சட்ட அமலைத் திறம்பட நடத்தவும் ஏற்படுத்தப்படவிருக்கும் 'கண்காணிப்புப்' படையில் சேர்ந்து தொண்டாற்ற முன்வரவேண்டுமென அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொள்கிறேன்'.

இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய இளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்'

(புறம். 150:7-13)

இவை பிற்காலத்துச் செய்யுளாயினும், முற்காலத்து நிலைமையையுங் குறிக்கும்.

நாகரிகத்தின் முளை குறிஞ்சி நிலத்திலேயே தோன்றிய தேனும், அது முழுவளர்ச்சி யடைந்தது மருதநிலத்து நகர்ப்பாங்கே யென்றும், குறிஞ்சி நாகரிகமும் முல்லை நாகரிகமும் மருத நாகரிகத்தின் கீழ்நிலைகளே யென்றும், நெய்தல் நிலை வணிக வளர்ச்சிக்கும் செல்வப் பெருக்கிற்குமே ஏதுவென்றும், பாலைநிலை நாகரிக வளர்ச்சி யின்றிப் பண்பாட்டிழிபையே காட்டுமென்றும், அறிதல் வேண்டும்.

மருதநிலக் குழுகாய வாழ்வில், ஒருமனை மணமும் இறப்பு வரை பிரியா இல்வாழ்வும் பெரும்பான்மையாயின. ஒருவனால் மணஞ் செய்யப் பட்டமைக்கு அறிகுறியாகப் பெண்ணின் கழுத்திற் பொற்றாலி கட்டப்பட்டது. பன்மனை மணமும் தீர்வைமுறையும் தொடர்ந்தனவேனும், தொல்லை மிகுதியும் பண்பாட்டிழிபும் பற்றி அவை தாழ்வாகக் கருதப்பட்டன. ஊர்த்தலைவனும் அவனுக்கு மேற்பட்ட அரசரும், இன்பச் சிறப்பு நோக்கிப் பன்மனை மனத்தையே கடைப்பிடித்தாரேனும், அதன் இழிவை அவரது தெய்வத் தன்மையான அதிகாரம் முற்றிலும் மறைத்து விட்டது. மருத நிலத்து நிலையான குடியிருப்பும் பயிர்த்தொழிலிற் குடும்பக் கூட்டுழைப்பும், கணவன் மனைவியர் காதலை வளர்த்து மணவாழ்க்கையை நீடிக்கச் செய்தன. உயிருக் கின்றியமையாத உணவுப் பொருள்கள் ஏராள மாகக் கிடைத்ததனால், வயிறாரவுண்டு இன்புறவும், உழைக்க இயலாதவர்க்குதவி அறம் வளர்க்கவும், ஏதுவாயிற்று.

பொற்காலத்தில் அசையெழுத்துத் தோன்றி யிருத்தல் வேண்டும். அசையெழுத்தாவது (Syllabary), உயிர்மெய்யை உயிரும் மெய்யுமாகப் பிரிக்காமல் தனியெழுத்தாக எழுதுவது.

பழங் கற்காலத்தில் பத்து வரையும், புதுக் கற்காலத்தில் நூறு வரையும், பொற்காலத்தில் ஆயிரம்வரையும், குமரி மாந்தர் எண்ணத் தெரிந் திருக்கலாம். ●

---

## டாக்டர் அம்பேத்கர் பெயரில் விருது



டாக்டர் அம்பேத்கர் பெயரில் தேசிய விருது ஒன்றை வழங்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. சமூக நல்லிணக்கத்துக்காகச் சிறந்த சேவை புரியும் தனிநபர் அல்லது நிறுவனத்துக்கு ரூ.10 இலட்சம் கொண்ட இந்த விருது ஆண்டு தோறும் வழங்கப்படும். இந்த விருது மத்திய சமூக நலத்துறையால் ஏற்படுத்தப்படுகிறது.

டெல்லியில் நடந்த டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழாக் குழுவின் சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய மத்திய சமூக நல அமைச்சர் திரு. சீத்தாராம் கேசரி, மேற்கொண்ட விருதை அமைக்கும் முயற்சிகள் நடந்து வருவதாகக் கூறினார்.

டாக்டர் அம்பேத்கர் நினைவைப் போற்றும் வகையில், ஏழு பல்கலைக் கழகங்களில் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்படும். டாக்டர் அம்பேத்கர் எழுதிய நூல்களையும், கட்டுரைகளையும் இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பது, உயர்நிலை ஆய்வுப் படிப்புகளை ஏற்படுத்துவது போன்ற திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

---

## தமிழ்நாட்டில் குழந்தைகள் இறப்பைக் குறைத்திட...

பிறந்த சில மாதங்களிலேயே இறந்துவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் தற்போது ஆயிரத்துக்கு 67 என்ற விகிதத்தில் உள்ளது. இதை இன்னும் பத்து ஆண்டுக்காலத்தில் 50-க்கும் கீழாகக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான நோய்த்தடுப்பு திட்டங்கள், குழந்தைகள் குறைந்த வயதில் இறப்பதை ஓரளவு தடுத்து நிறுத்தி உள்ளன. இந்த முயற்சிகளின் காரணமாக சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான குழந்தைகள் உயிர் பிழைத்துள்ளன.

தமிழ்நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள் காரணமாக குழந்தைகள் இறப்பு விகித இலக்கினைத் தமிழகம் மிஞ்சிவிடும் எனத் தமிழகச் சுகாதாரத்துறைச் செயலர் திரு. கே.இன்பசாகரன், அண்மையில் இந்தியக் குழந்தை மருத்துவச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்ச்சியில் பேசும் போது தெரிவித்தார்.



# இறந்தோரை அடையாளம் காணும்

## ஒரு புதிய முறை

தடய அறிவியல் துறைப் பேராசிரியர் டாக்டர் ப. சந்திரசேகரன், இறந்தோரை அடையாளம் காணுமுகமாக ஒரு புதிய முறையை வகுத்துள்ளார். முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகு எழுந்த சில விசித்திரமான சூழ்நிலையில், இந்தப் புதிய முறையை வகுப்பதற்கான தேவை எழுந்தது.

குற்றப் புலனாய்வு முறையில் இறந்தோரை அடையாளம் காணுதல் அடிப்படை தேவை மட்டுமல்ல; ஒரு முக்கியமான வழிமுறையும் கூட ஆகும். எல்லாவகையான அடையாள முறைகளும் இறப்பிற்கு முன் உள்ள ஆவண மற்றும் பிற குறிப்புகளை இறப்பிற்குப் பின் கிடைக்கும் மீதங்களுடன் ஒப்பிட்டு வழி காணும் வகையிலேயே அமைந்துள்ளன.

முக அடையாளங்கள் முழுமையாக இருந்தால், உற்றார் உறவினர் மற்றும் நண்பரைக் காணவிட்டு அடையாளம் காணலாம். பார்வை மூலம் அடையாளம் காணுதலும் ஒரு அறிவியல் வழிமுறையே ஆகும். உறவினரது மனதில் பதிந்துள்ள முக அடையாளங்களுடன், மரணமுற்றோரின் முக அடையாளங்களை முழுமையாக மனதில் ஒப்பிட்டு அடையாளம் காணப்படுகிறது. இம்முறையில் அடையாளம் காணுவோரின் மூளை ஒரு கணிப்பொறி போல இயங்குகிறது. இந்த முறையிலும் ஒரு சிக்கல் உள்ளது. அடையாளம் காணுவோர் இறந்தவரை முன்னமே கண்டிராது வெறும் நிழற்படத்தை மட்டும் கண்டிருந்தால் இம்முறை சிரமமாக ஆகிவிடுகிறது.

சில வழக்குகளில் இறந்தவர் பல பெயர்களில் உளவிட நேர்ந்திருக்கும்; திரு. ராஜீவ் காந்தி வழக்கில் சம்பந்தப்பட்டவர் போல; இவர்களை அடையாளம் காண நெருங்கிய உறவினர் இல்லாது போகலாம். நமக்குக் கிடைத்தவரை வெறும் சில நிழற்படங்களே ஆகலாம். அவையும் எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்டவையாக இருக்கலாம். இவ்வகையாக நிழற்படங்களும் மட்டும் கண்டிருந்தால் இம்முறை சிரமமாக ஆகிவிடுகிறது.

சில வழக்குகளில் இறந்தவர் பல பெயர்களில் உளவிட நேர்ந்திருக்கும்; திரு. ராஜீவ் காந்தி வழக்கில் சம்பந்தப்பட்டவர் போல; இவர்களை அடையாளம் காண நெருங்கிய உறவினர் இல்லாது போகலாம். நமக்குக் கிடைத்தவரை வெறும் சில நிழற்படங்களே ஆகலாம்.

அவையும் எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்டவையாக இருக்கலாம். இவ்வகையாக நிழற்படங்களும் குறிப்பிட்ட நபரைத் தனியாக ஒரு குறிப்பிட்ட கோணத்திலோ அல்லது ஒரு கும்பலிலோ இருக்கும்படி எடுத்திருக்கப்பட்டிருக்கலாம். இவ்வகைச் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நபரைப் புகைப்படத்தில் மட்டும் கண்டிருப்பவர் இறந்தவரது உடலை அடையாளம் கண்டிடச் சிரமப்பட நேரிடும்.

பேராசிரியர் டாக்டர் சந்திரசேகரனின் புதிய அடையாளம் காணும் முறை இவ்வகை சந்தர்ப்பங்களில் மிகவும் உதவிகரமானதாக இருக்கும். இம்முறையில் இறந்தவரது தலை மாதிரியை இறந்த உடலிலிருந்து வார்ப்படம் போல தயாரித்து, அன்னாரது புகைப்படத்துடன் மன்னனு ஒப்பிடு கருவியில் ஒப்பிட வழி வகுக்கப்பட்டுள்ளது. இம்முறையில் தலையின் மாதிரியை, புகைப்படத்தில் உள்ள கோணத்திலேயே நிறுத்தி ஒப்பிடுவதற்கு வகை உள்ளது. இரண்டு மின்னனுப் புகைப்படக் கருவிகள், புகைப்படக் கலவைமானி மற்றும் நுண்கருவி முதலியவை உபயோகிக்கப்படுகின்றன.

திரு. சந்திரசேகரனின் முன்னைய கண்டுபிடிப்பான மின்னனு மண்டையோடு அடையாளம் காணும் இயந்திரம் இந்த முறைக்கும் உபயோகப்படுத்தலாம். இவ்வகை இயந்திரத்தை இவர் கண்டுபிடித்தபோது, இவ்வகை கருவிகளை உபயோகித்த மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. இறந்தவரது முகக் குறியீடுகள் முழுமையாக இருக்கும்பட்சத்தில் வார்ப்பட முறை மிகவும் முக்கிய வழிமுறையாகி உதவுகிறது. பாசி பூசின முறைமூலம் வார்ப்படம் எடுக்கப்படுகிறது. இவ்வார்ப்படத்தை உபயோகித்து இரண்டு பகுதிகளாகப் பிளாஸ்டர் வார்ப்படம் தயாரித்தவுடன் இந்த மாதிரி இறந்தவரது தலைபாகத்தின் அசல் நகல் போல உதவுகிறது. இதற்கான நிலையில் இந்த வார்ப்படத்தை நிறுத்தி, இதனை முன் பின்னாகவோ, பக்கவாட்டிலோ அசைத்து, புகைப்படத்திலுள்ள அதே கோணத்தில் பல வகைப் பிம்பங்களுடன், புகைப்படத்தையும், வார்ப்படத்தையும் இணைத்துச் சரியான ஒப்பீடு முறை காணப்படுகிறது. முக குறியீடுகள் மற்றும் பிற புகைப்பட அடையாளக் குறியீடுகள் இம்முறையில் ஒப்பிடப்படுகின்றன. சாதாரண முறையிலுள்ள சிறு தவறுகள் கூட இந்த முறையில் நிகழ்வதில்லை.

தமிழ்நாடு தடய அறிவியல் பணியில் 33 ஆண்டுகளாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள திரு. சந்திரசேகரனை, நாட்டிற்கு இம்முறையை அர்ப்பணிப்பதில் மிகவும் பெருமையை கொண்டுள்ளார். குறிப்பாக 35-வது அனைத்திந்தியக் காவல் பணி போட்டிகளுக்காக எல்லா மாநிலத்து புலனாய்வுப் பணியாளரும் நம் மாநிலத்தில் குழுமியுள்ளபோது இம்முறை நாட்டுப்பணியில் அர்ப்பணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.





## தருமபுரி மாவட்டம்

# பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தருமபுரி மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு ஆற்றி வருகிறது.

ஒரு நாளைக்கு 2,000 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1990-91-இல் தனது 20-வது அரவைப்பருவத்தில் 3.73 இலட்சம் டன் கரும்பை நல்ல முறையில் அரவை செய்துள்ளது. இவ்வாண்டு அரவை செய்த கரும்புக்கு ரூ.1,267 இலட்சம் கரும்பு கிரயமாகவும் ரூ.93.61 இலட்சம் லாரி வாடகை மானியமாகவும், ரூ.4.05 இலட்சம் விதை மற்றும் கரும்பு வளர்ச்சிக்கான மானியமாகவும், கொடுக்கப்பட்டுள்ளது. சென்ற அரவைப் பருவத்தில் ஒரு டன் கரும்புக்குக் கரும்பு விலையாக ரூ.352.60 கொடுக்கப்பட்டது.

இவ்வாலை 1987-88-ஆம் ஆண்டிற்கு உற்பத்தித் திறனுக்காக மாநில அளவிலான முதல் பரிசு பெற்றது. 1988-89-ஆம் அரவைப் பருவத்தில் உற்பத்தித் திறனில் சிறப்பாகச் செயல்பட்டிருந்தமைக்காக அகில இந்திய அளவில் தேசிய உற்பத்திக் குழுவின் பாராட்டையும், விருதையும் பெற்றுள்ளது.

இவ்வாலை மூலம் ஒவ்வொரு அரவைப் பருவத்திலும் சுமார் 8,500 கரும்பு விவசாயிகள் சுமார் ரூ.1,225 இலட்சம் ரூபாயும், நேரடி வேலைவாய்ப்பின் மூலம் 950 தொழிலாளர்கள் 200 இலட்சம் ரூபாயும், மறைமுகமாகச் சுமார் 2,100 விவசாயத் தொழிலாளர்கள், சுமார் 105 இலட்சம் ரூபாயும், சுமார் 860 பேர் வாகனப் போக்குவரத்து மூலம் சுமார் 24 இலட்சம் ரூபாயும் பெற்றுப் பயனடைகிறார்கள் என்று கூறிக் கொள்வதில் இவ்வாலையின் நிர்வாகம் பெருமைப்படுகிறது.

மேலும், இவ்வாலையில் தற்போது 17,698 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்கள் 135.55 இலட்சம் ரூபாயும், மாநில அரசு 40.55 இலட்சம் ரூபாயும், கூட்டுறவு நிறுவனங்கள் 0.06 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் ரூ.176.16 இலட்சம் பங்கு மூலதனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருகிறது. எனவே, உறுப்பினர்கள் நீர் ஆதாரத்தைப் பெருக்கிக் கொள்ள மத்திய அரசு அனுமதித்துள்ள சர்க்கரை வளர்ச்சி நிதிக் கடனில் இதுவரையில் ரூ.148.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த ஜூன் மாதம் முடிய 1,830 உறுப்பினர்களுக்கு ரூ.127.55 இலட்சம் புதிய கிணறு தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்திக் கொள்ளவும், ஆயில் என்ஜின் மற்றும் மின் மோட்டார் பொருத்தவும் 8 சதவிகிதம் குறைந்த வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் ஆண்டில் ரூ.20.94 இலட்சம் நீர்ப்பாசனத் திட்டத்திற்கென உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளின் மேம்பாட்டிற்காகப் பலவேறு வகைகளில் ரூ.300 இலட்சம் கடனுதவி வழங்க முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

தரமான நாற்றங்காலை ஊக்குவிக்கவும், அதிக மகசூல் தரக்கூடியதும் நல்ல சர்க்கரைக் கட்டுமானம் தரக்கூடியதுமான புதிய ரகக் கரும்பு பயிர் செய்யவும், தக்க மானியம் வழங்குதல், மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்துகள், களைக் கொல்லி மற்றும் வைரஸ் மருந்துகள் வழங்குதல், வறட்சிக் காலத்தில் பொட்டாஷ் உரம் வழங்குதல், ஊடு பயிர் செய்வதற்காக மானிய விலையில் விதைகள் வழங்குதல் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்யவும் அதிகமான மகசூல் எடுத்த விவசாயிகளுக்குப் பரிசுகள், கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்தல், கரும்பு பரிசோதனை வயல்களுக்கு மானியம் வழங்குதல், லாரி வாடகை மானியம் போன்ற கரும்பு வளர்ச்சிப் பணிக்

காக ரூ.45 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிணற்றில் தண்ணீர் குறைவாக இருக்கும்போது சொட்டுநீர்ப் பாசன முறையில் கரும்பை நன்கு பராமரிக்க இண்டாக் கோரமண்டல், சென்னை என்ற நிறுவனம் மூலம் சோமனிஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. கே.நாரர்யண் என்பவரது நிலத்தில் மாதிரி வயல் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சொட்டு நீர்ப் பாசனத்திற்காக ஏற்படும் செலவுகளில் 50 சதவிகிதத்தை ஆலையே ஏற்கிறது. மீதியுள்ள 50 சதவிகிதம் தொகையை 4 ஆண்டுகளில் சம தவணைகளில் 12.5 சதவிகித வட்டி விகிதத்தில் கரும்பு கிரயத்தில் பிடித்தம் செய்ய வகை செய்து முன்னோடி விவசாயிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டு அரவைக்கு இதுவரை 9,532 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. தொடர் மழையின் காரணமாக இன்னும் கரும்பு நடவு செய்யப்பட்டு வருகிறது. சுமார் 1,200 ஏக்கர் கரும்புப் பதிவு ஆலையுடன் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட 9,532 ஏக்கர் கரும்பில் 5,110 ஏக்கர் கரும்பிற்குக் கரும்பு மகசூல் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடவு கரும்புக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4,450 மறுதாம்புச் கரும்புக்கு ரூ.3,350 மத்திய மற்றும் வர்த்தக வங்கிகளின் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வரும் அரவைப்பருவத்தில் சுமார் 4 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கரும்புச்சாலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 7 சாலைகள் 44.45 கிலோ மீட்டர் தூரம் மற்றும் ஒரு பாலம் ஆகியவை ரூ.166.2 இலட்சம் செலவில் ஆலை மூலம் அமைக்கப் பட்டுள்ளது.

தொழிலாளர்கள் நலன்களுக்காகச் சிற்றுண்டிச்சாலை, தொழிலாளர் ஓய்வு விடுதி, உணவு அறை, மருந்தகம், கூட்டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் சங்கம், ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் நலன் காப்பதுடன் ஒரு நல்லுணர்வு ஏற்படவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது. ஆலையரால் மெட்ரிகுலேஷன் பள்ளி ஒன்று நடத்தப்படுகிறது. இதில் தொழிலாளர்கள், கரும்பு விவசாயிகள் மற்றும் அலுவலர்களின் குழந்தைகள் கல்வி பயிலுகின்றார்கள். ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் கடந்த ஆண்டுகளில் 20 சதவிகிதம் அதிகபட்ச போனஸ் வழங்கப்பட்டது.

ஆலை விவசாய உறுப்பினர் குழந்தைகள், ஆலைத் தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் இந்த மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் பல்தொழில் நுட்பக் கல்வி பயில வசதி செய்து இம்மாவட்டத்தில் தொழில் முன்னேற்றம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் உறுப்பினர்கள் வேண்டுகோளுக்கிணங்க, அரசு இந்த ஆலையில் பல்தொழில் நுட்பப் பயிலகம் ஒன்றைச் சுயநிதி ஏற்பாட்டின்கீழ் தொடங்க அனுமதி வழங்கப்பட்டு, அதன்படி பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்கி 540 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள்.

இவ்வாறு, இந்தச் சர்க்கரை ஆலை தருமபுரி மாவட்ட ஏழை எளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றுவதில் சிறப்பிடம் பெற்று வருகின்றது.

- மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்

## தமிழ்நாட்டில் சந்தன மரக் கடத்தல் குற்றத்திற்கு எதிராக நடவடிக்கை:

தமிழ்நாட்டில் சந்தன மரக் கடத்தல் குற்றத்திற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.40.00 இலட்சம் அனுமதியளித்துள்ளார்.

சந்தன மரக் கடத்தலைத் தடுக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரசின் வரவு செலவு அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டது. வனத்துறை அலுவலர்களுக்குப் போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளை அதிகப்படுத்துவதற்கே இதில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.10 இலட்சமும், கம்பியில்லாத தந்தி வசதிக்கு ரூ.8 இலட்சமும் செலவிடப்படும். சாலை வசதியைப் பெருக்க ரூ.5 இலட்சமும், இரட்டைத் தொலைநோக்காடிகள் மற்றும் திசைகாட்டும் கருவிகளுக்கு ரூ.5 இலட்சமும், ஆயுதங்கள் வாங்க ரூ.9 இலட்சமும், வான்வழி கண்காணிப்புக்காக ரூ.3 இலட்சமும் இந்தத் திட்டத்தில் அடங்கும்.

முதலில் உழையுங்கள். பிறகு வெற்றியைச் சந்திக்கலாம். முதலில் உழையுங்கள் பிறகு ஓய்வெடுத்துக் கொள்ளலாம். முதலில் பலவீனத்தை அகற்றுங்கள். பிறகு, துணிவைப் பெறலாம். முயற்சி, உழைப்பு, துணிவு ஆகிய மூன்றினால் ஆரம்பக் காலத் துன்பத்தை வென்று அழகான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

—ஜேம்ஸ் ஆலன்

# 18-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 1992



**18**-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 1992 தொடக்க விழா 6.1.1992-ஆம் நாள், சென்னை காமராசர் சாலையிலுள்ள தீவுத்திடல் அறிஞர் அண்ணா கலை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பொருட்காட்சியைத் தொடக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

செய்தி சுற்றுலாத்துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்தும், 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி துவக்கி வைக்கப்பட்டு, நமது கவனத்தைக் கவர்ந்தும், பொது மக்களுக்குத் தேவையான பொழுதுபோக்கினை வழங்கியும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. இப்பொருட்காட்சி தமிழ்நாட்டிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் பொது மக்களைக் கவர்ந்து இழுக்கிற பெருமை பெற்றிருக்கிறது என்பதை நான் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறேன். தற்போது அதை நேரடியாகவே பார்க்கிற சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளேன்.

தமிழகத்தின் தலைநகரில் இது தொடங்கப்பட்டாலும், 'அகில இந்திய' என்கிற அடைமொழியோடு அழைக்கப்பட்டு, தேசிய ஒருமைப்பாட்டின் நோக்கத்தை நிறைவு செய்கிற பெருமையையும் இப்பொருட்காட்சி பெற்றுள்ளது.

இந்திய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படும் வகையில், தற்போது நாட்டின் பல்வேறு சம்பவங்கள் நடந்து வருவதை நாம் அனைவரும் அறிவோம். ஆண்டாண்டுக் காலமாகத் தான் பிறந்த இடத்தில், தான் வளர்ந்த இடத்தில், தான் உழைத்த இடத்தில், தமிழன் உரிமையோடு, பாதுகாப்போடு வாழ முடியாத நிலைமை இன்று நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில் 'சுற்றுலா' விருப்பங் கொண்டு, எந்தத் தமிழனும் பக்கத்து மாநிலத்துக்குப் போக முடியாத சிக்கல் இருக்கிறதென்ற உண்மையை, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறத்தான் வேண்டும்.

இந்தியா பல்வேறு மாநிலங்களின் தொகுப்பு; தேசிய ஒருமைப்பாடுதான் அந்த மாநிலங்களை நிலைத்த தேசப்பற்றால், கலாச்சாரப் பெருமைகளால், பண்பாட்டுப் பெருமிதங்களால், ஒன்றாகக் கட்டி வைத்திருக்கிறதென்று நாம் பெருமைப்பட்டோம்; இன்றும் பெருமைப்படுகிறோம். அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கின்ற முன்மாதிரி சக்தியாகத் தமிழ்நாடு இன்றும் இருந்து வருகிறதென்பதைக் காட்டத்தான், நாம் பல்வேறு

மாநிலங்களையும் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கச் செய்துள்ளோம்.

அதே நேரத்தில், பலவேறு துறைகளில் தமிழகம் கண்டுள்ள முன்னேற்றம் குறித்தும், தமிழக மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கென்று தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்தும், இந்திய மக்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் இந்தப் பொருட்காட்சி நடத்தப்படுகிறது. குறிப்பாக, இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படுவதால், தமிழகத்தின் கலாச்சாரப் பண்பாட்டுப் பலகணியாகவும் இந்தப் பொருட்காட்சி திகழ்கிறது.

மேலும், மனிதாபிமான வழியில் இப்பொருட்காட்சியின் மூலம், ஏறத்தாழ 20,000 நபர்களுக்குத் தற்காலிக வேலைவாய்ப்பும், 2,000-க்கும் மேற்பட்ட கலைஞர்களுக்குக் கலை நிகழ்ச்சி நடத்துவதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. ஏழைக் கலைஞர்களுக்கு வாழ்வளிப்பதை எண்ணும்பொழுது, அது மகிழ்ச்சிகரமான உணர்வினையும் நமக்குத் தருகிறது.

தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுடைய சொர்க்க பூமி என்றால் அது மிகையாகாது. இது கலையும், கலாச்சாரமும் நிறைந்த நாடு; வற்றாத வளங்கள் கொண்ட சரித்திரப் பூமி; காண்போரைக் கவரத்தக்க எழில்மிகு கோடை வாசஸ்தலங்கள்; தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்கலன்களாக விளங்கும் பெருங்கோயில்கள்; சிற்பக்கலைக்கு மகுடம் சூட்டிய பெருமை இணையற்ற கலாச்சாரத்தை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்ற புராதன பொக்கிஷங்களாகும்.

இவைகளைப் பார்க்க வருகிற நோக்கில், தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிற வகையில், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற வசதிகளை அமைத்துக் கொடுக்கத்தான், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் துவக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சுற்றுலாவை வளர்ப்பதும், சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைப் பெருக்குவதும் இக்கழகத்தின் முக்கியக் குறிக்கோள்களாக இருக்கின்றன.

தொடர் வளர்ச்சியையும், நிலையான வருமானத்தையும் உண்டுபண்ணுகிற அமைப்பாக, எந்த அரசு நிறுவனமும் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டால், அரசுத் துறை நிறுவனங்கள் பலவற்றின் மீது குறை கூறுகின்ற சந்தர்ப்பம், எவருக்கும் வராமல் நாம் செய்துவிட முடியும்.

அந்த வகையில் பார்க்கிறபோது, 5 ஓட்டல்களுடனும், 2 சொகுசுப் பேருந்துகளுடனும் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம், இன்று 34-க்கும் மேற்பட்ட ஓட்டல்களையும், இளைஞர் விடுதிகளையும் இயக்கிக் கொண்டிருக்கிறது என்பது, சாதனைகளை நிகழ்த்தும் இக்கழகத்தின் வெற்றிக்குரிய சான்றாகும். அதேபோன்று, 22 சொகுசுப் பேருந்துகளையும், 5 கார்களையும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இந்த நிறுவனம் நடத்தி வருகிறது என்ற செய்தி, இவர்களுடைய உழைப்பு வளர்வதோடு, ஊக்கமும் வளருகிறது என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

பணம் படைத்தவர்கள்தான் சொகுசான ஓட்டல்களில் தங்க முடியும் என்கிற நிலையை மாற்றி, ஏழை மற்றும் நடுத்தர மக்களும் வசதியோடு தங்குகிற வகையில், ரூ.20 முதல் ரூ.600 வரை நாளொன்றுக்கு வாடகை கொண்ட அறைகளையும் வழங்குவதோடு, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 14 வகைப்பட்ட சுற்றுலாப் பயணங்களை அமைத்துக் கொடுத்து, உள்நாட்டுப் பயணிகளாலும், வெளிநாட்டுப் பயணிகளாலும் பாராட்டப்படுகிற பெருமையையும் கொண்டிருக்கிறது இந்தச் சுற்றுலாக் கழகம்!

இந்த ஆண்டு சுற்றுலா ஆண்டாக இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டிலும் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக பலவேறு ஏற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்து வருகின்றன. அவைகளில் சில முக்கியமானவற்றை உங்களுக்குத் தெரிவிப்பதில், நான் சுற்றுலாத் துறையின் அமைச்சராகவும் இருப்பதால், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய விவரங்களை முழுமையாகத் தெரிந்து





உழவே செல்வம் உண்டு பண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம்

—நாமக்கவிஞர் வெ. இராமலிங்கனார்.

கொள்கிற வகையில், இந்த ஆண்டு ஒரு புத்தகம் அரசால் வெளியிடப்படும். பொங்கல் திருநாளை ஒட்டி மாமல்லபுரத்தில் ஒரு நாட்டிய விழா தொடர்ந்து ஒரு மாதம் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே, சிதம்பரத்தில் இந்த ஆண்டு ஒரு நாட்டியாஞ்சலியும், சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை அரிமா சங்கத்துடன் கலந்து ஒரு காற்றாடித் திருவிழாவினையும் (Kite Festival) இம்மாதம் சென்னை மெரினா கடற்கரையில் நடத்தும். அடுத்து, ரிக்கி, டிக்கி, டாவி Youngster Club of India என்ற அமைப்பின் உதவியுடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் Wind Surfing Regatta என்ற நிகழ்ச்சிகளை, அகில இந்திய அளவில் அடுத்த மாதம் முட்டுக்காட்டில் நடத்த உள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகைக்காக மட்டுமின்றிப் புதுமையான வகையில், காஷ்மீர் மற்றும் கேரள மக்களின் உணவு வகைகளைக் கற்றுத்தரும் வகையில், சிறப்புச் சமையல் கண்காட்சிகளும், இளைஞர்களுக்காக மலையேறும் பயிற்சி போன்றவற்றையும் அமைத்துக் கொடுத்து, சுற்றுலாத் துறையும் சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், பல்வேறு புதுமைகளைப் புகுத்தி வருகின்றன. இந்த ஆண்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்படுகின்ற ஓட்டல்களில், நவம்பர் மாதம் வரை 2,87,644 பேர் தங்கிப் பயனடைந்துள்ளனர்.

இதில், 13,062 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது, நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சொகுசுப் பேருந்துகள் மூலம் இதுவரை 52,210 பேர் பயணம் செய்துள்ளனர். காலத்தின் தேவைக்கேற்ப, சுற்றுலாக் கழகம் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கின்ற முயற்சிக்கு, வரவேற்பு வழங்குகிற சாதனைகளே இவைகள் என்றால் அது மிகையாகாது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைக் கருத்தில் கொண்டு திருத்தணி, திருக்கழுக்குன்றம், மேல்மருவத்தூர், கடலூர், மேட்டுப்பாளையம், கூடலூர், குன்னூர், திருச்செந்தூர், இராமேசுவரம் மற்றும் ஓசூர் போன்ற இடங்களில், ஓட்டல்கள் புதிதாகக் கட்டப்பட்டு, விரைவில் திறக்கப்படும் நிலையில் இருக்கின்றன. மேலும் இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை, சேலம், கும்பகோணம், தஞ்சாவூர், கொடைக்கானல் போன்ற இடங்களில் புதிதாக ஓட்டல்களும் கட்டப்படும். சென்னைக்கு வருகிற சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில், பிராட்வேயிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியினை, எல்லா வசதிகளும் கொண்ட ஓட்டலாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்துக்கும் மேலாக - சுற்றுலா என்பது தொழிலாக 1986-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், சுற்றுலாத் திட்டங்களுக்குத் தொழிற்சாலைக்குரிய சலுகைகள் ஏதும் அறிவிக்கப்படவில்லை. எனவே, புதிய தொழிற்சாலைகளுக்குத் தரப்படும் சலுகைகளுடன், ஒரு சில மாற்றங்களுடன் புதிய சுற்றுலாத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும். மேலும், மாநிலங்களிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களின் தனித்தன்மையைப் பாதுகாப்பதற்கும், அழகுபடுத்துவதற்கும், சிறப்புச் சுற்றுலாத் தேர்விடங்களாக (Heritage Towns) அறிவிக்க மத்திய அரசு உத்தேசித்துள்ளதால், தமிழகத்திலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை அத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ள ஆவன செய்யப்படும்.

சுருக்கமாகச் சொன்னால், சுற்றுலா மேம்பாட்டைப் பொருத்தவரையில், சுற்றுலாத் தலங்களைத் தூய்மையாக வைப்பதும், புராதனச் சின்னங்களைப் பேணிக்காப்பதும், நமது தலையாயக் கடமையாக இருக்க வேண்டும். எனவே, இப்பணியில் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டி, அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்து அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! - எனக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்!”

விழாவில் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ப. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

# இந்தப் பொருட்காட்சியில்...

**1974**-ஆம் ஆண்டு முதற்கொண்டு 'பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சியைத்தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் நடத்தி வருகிறது. இவ்வாண்டு 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் முற்றும் மாறுபட்ட வகையில் வெகு சிறப்பான முறையிலும் அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு துறைகளில் தமிழகம் கண்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கெனத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டுமென்பதே இப்பொருட்காட்சியின் முக்கிய நோக்கமாகும்.

தமிழகத்தின் தன்னிகரற்ற சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்களை இம்மாநிலத்தினர் மட்டுமன்றி இந்தியாவின் மற்ற மாநிலத்தவரும் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வண்ணமும், நம் சிறப்பை அறிந்துகொள்ளும் வகையிலும் இப்பொருட்காட்சி வகை செய்வதுடன், இதன்மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கும் நம் மக்களுக்கும் பொழுதுபோக்கும் ஓர் மகிழ்விடமாகவும் துணை செய்கிறது. சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அதிகமாக இருப்பதன் காரணமாக, இச்சுற்றுலாப் பொருட்காட்சி இக்காலகட்டத்தில் நடத்தப் படுகின்றது.

இவ்வாண்டுப் பொருட்காட்சியில் நம் மாநில அரசின் துறைகளும் மாநில அரசு நிறுவனங்கள் 37-ம் வெளி மாநிலச் சுற்றுலாத் துறைகள் 2-ம் வெளி மாநில நிறுவனங்கள் 10-ம் கலந்து கொள்கின்றன. மேலும், இவை தவிர தனியார் துறை நிறுவனங்களும், கைத்தறிச் சங்கங்களும் பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த 205 அங்காடிகளும் இப்பொருட்காட்சியில் பங்கேற்பது சிறப்பம்சமாகும்.

பொருட்காட்சியின் நிரந்தரக் கலையரங்கமான 'அறிஞர் அண்ணா கலையரங்கத்தில்' தினந்தோறும் இன்னிசை, நாடகம் மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்குச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.தற்காலிகத் திறந்த வெளித் திரையரங்கம் அமைக்கப்பட்டு நாள் தோறும் ஓர் திரைப்படம் திரையிடப்படுகிறது. அன்னை இந்திரா சிறுவர் உல்லாச உலகத்தில் நாள்தோறும் நடைபெறும் கிராமிய நாட்டியம், நடனம், வீர விளையாட்டுகள், தந்திரக் காட்சிகள் குழந்தைகளைக் களிப்புறச் செய்கின்றன. அங்கே சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்தின் அறிவியல் உல்லாச உலகத்தின் காட்சிக் கூடத்தில் இளந்தளிர்கள் எளிய முறை அறிவியல் அறிவு பெற ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

வண்ண வண்ண மீன்கள் மீன்காட்சியகத்தில் கண்களைக் கொள்ளை கொள்கின்றன. இந்த 18-வது பொருட்காட்சியில் அனைவரும் ஆவலுடன் குதுகலிக்கும் சிறுவர் இரயிலும், குதிரைச் சவாரியும் இவ்வாண்டு நடைபெறுகின்றது.

**ஒட்டல் தமிழ்நாடு (டிரைவ்-இன்-ரெஸ்டாரண்ட்)**

பொருட்காட்சித் திடலில் நிரந்தரமாக அமைந்துள்ள குளிர்சாதன வசதியுடன் அமைந்துள்ள ஒட்டல் தமிழ்நாடு உணவகம் மக்களுக்காகச் சுகாதாரமான முறையில் தயாரித்து சுவையான உணவு வகைகள், சைவம்-அசைவம் இரண்டும் பரிமாறி நற்பெயர் பெற்றுள்ளது.

இப்பொருட்காட்சி நாள்தோறும் பிற்பகல் 3 மணி முதல் இரவு 10 மணி வரையும், விடுமுறை மற்றும் விழாக் காலங்களில் காலை 11 மணி முதல்இரவு10 மணி வரையும் திறந்துவைக்கப்படும்.

இவ்வாண்டு பொருட்காட்சிக் காலத்தில் கீழ்க்கண்ட சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

1. தென்னிந்தியக் கலாச்சார மையக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள்
2. மிகப் பழமையான ஊர்திகளின் கண்காட்சி
3. ஆடை அலங்காரக் கண்காட்சி
4. உணவுக் கண்காட்சி
5. பொம்மைக் கண்காட்சி
6. தோட்டக்கலைக் கண்காட்சி
7. புத்தகக் கண்காட்சி
8. நாய்க்கண்காட்சி
9. மகளிருக்கான கோலப் போட்டி
10. கல்லூரி மகளிருக்கான கலை நிகழ்ச்சிகள்.

இதுவரை நடைபெறாத மிகப் பழைய ஊர்திகளின் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட உள்ளது. முதன் முறையாக இப்பொருட்காட்சியில் பழைய ஊர்திகளின் விவரங்களுடன் கூடிய புகைப்படங்கள் கொண்ட இக்கண்காட்சி சுற்றுலா அரங்கில் இடம்பெற்றுள்ளது. மேலும் பழைய ஊர்திகளின் ஒட்டமும், அக்கார்களின் கண்காட்சியும் நடைபெற உள்ளது. பழைய ஊர்திகளின் ஒட்டத்தில் பலவகையான சுமார் 40 மிகப் பழமையான கார்கள் பங்கெடுக்க இருக்கின்றன என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் தாங்களே ஒட்டும் வகையில் சிறிய கார் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில் பல்வேறு மாநிலங்களில் உள்ள புகழ்வாய்ந்த கோயில்களின் படங்களும், கலாச்சாரங்களை விளக்கும் படங்களும் நுழைவாயிலில் இடம் பெறுகின்றன.

# தமிழ்நாட்டில்

# முழு அடைப்பு வெற்றி!

## பொதுமக்களுக்கு மாண்புமிகு முதல்வர் நன்றி

கர்நாடக மாநிலத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் வன்முறைச் செயல்களைக் கண்டிக்கவும், அந்த மக்களுக்குப் போதுமான பாதுகாப்பைத் தரத் தவறிய கர்நாடக மாநில அரசைக் கண்டிக்கவும் கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக முதல்வர் நேரிலும், தொலைபேசியிலும், கடிதங்கள் மூலமாகவும் கேட்டுக் கொண்ட பிறகும், மத்திய அரசு தக்க சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டிக்கவும், கர்நாடகத்திலுள்ள தமிழ் மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க மத்திய அரசும் கர்நாடக மாநில அரசும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தவும் ஜனவரி 2-ஆம் தேதி (2.1.1992) காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தமிழகம் தழுவிய முழுவேலை நிறுத்தம் நடத்துவதென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 30.12.1991-இல் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து 2.1.1992-ஆம் நாள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை 12 மணிநேரம் முழு அடைப்பு அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் கடைகள் மூடிக் கிடந்தன. பேருந்து, இரயில், ஆட்டோ, டாக்சிகள் எதுவும் ஓடவில்லை. அனைத்து அரசு அலுவலகங்களும், அரசுத் துறை நிறுவனங்களும், பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தன. அன்று பொதுவிடுமுறை நாளாக அறிவிக்கப்ட்டிருந்தது. வங்கிகளுக்கும் அன்று விடுமுறை அளிக்கப்பட்டது. திரைப்படக் கொட்டகைகளின் காலைக் காட்சியும், பிற்பகல் காட்சியும் ரத்து செய்யப்பட்டன. திரைப்படப்பிடிப்பு நிலையங்களில்,படப்பிடிப்பு நடைபெறவில்லை. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான பேருந்துகள் எதுவும் ஓடவில்லை. பேருந்து நிலையங்கள் வெறிச்சோடிக் கிடந்தன. இரயில், விமானப் போக்குவரத்துகள் மாலை 6 மணி வரை நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. தமிழ்நாட்டின் அனைத்து நீதி மன்றங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.





காய்கறிக் கடைகள், நடைபாதைக் கடைகள் அனைத்தும் மூடிக்கிடந்தன.

மக்களின் அத்தியாவசியத் தேவையான பால் விநியோகம், குடிநீர் வழங்கல், மருத்துவமனை, பத்திரிகை அலுவலகங்கள் ஆகியவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

முழு அடைப்பு வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெற்றதற்குத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டார்:

'கர்நாடகத் தமிழ் மக்கள் மீது கடந்த இரு வாரங்களாகக் கன்னட வெறியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச் செயல்களால் தாங்கொண்ணாத் துயர் அடைந்து தமிழகத்திற்கு ஓடிவந்து கொண்டிருக்கும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், தலைமுறை தலைமுறையாகத் தங்கள் மாநிலத்தில் தங்கி வாழ்ந்து வரும் தமிழர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கத் தவறிய கர்நாடக அரசைக் கண்டித்தும், இந்திய ஒருமைப்பாட்டையே அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கர்நாடக அரசைக் கண்டித்து உரிய நேரத்தில் நடவடிக்கைகள் தொடரத் தவறிய மத்திய அரசைக் கண்டித்தும், இன்று தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட முழு வேலை நிறுத்தமும், முழு அடைப்பும் மாபெரும் வெற்றி பெறச் செய்த தமிழக மக்களுக்கும், அரசியல் கட்சியினருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழனின் மாபெரும் தன்மானப் பிரச்சினையை அணுகும் பொழுதும், நாம் உணர்ச்சி வசப்படாமல் அமைதியான முறையில் இந்த முழு அடைப்பினை நடத்திக் காட்டியுள்ளது நமக்கு மேலும் பெருமை சேர்க்கிறது. தமிழ் மக்கள் அனைவரின் ஒருமித்த உணர்வினைக் கர்நாடக அரசும், மத்திய அரசும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் இன்றைய முழு அடைப்பினை நாம் நடத்தி முடித்துள்ளோம். இம்மாபெரும் வெற்றியை இந்த இக்கட்டான காலகட்டத்தில் நமக்கு ஈட்டித் தந்த ஒவ்வொருவருக்கும் என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் பாராட்டுதலையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடத்தி முடித்த முழு அடைப்போடு நாம் நமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். தமிழர்கள் விழிப்புணர்வோடு இருந்தால்தான் தங்களின் உரிமைகளைக் காக்க முடியும் என்ற அவலநிலை இன்றும் நமது நாட்டில் தொடர்கின்றது. கர்நாடகத் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு ஏவி விடப்பட்ட வன்முறைச் செயல்களைத் திசை திருப்பப் பல முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவேதான், நாம் மிக்க விழிப்புணர்ச்சியுடனும், எச்சரிக்கையுடனும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தமிழகத்தில் வாழும் கன்னடர்களுக்குப் பாதுகாப்பு இல்லாதது போலவும், அவர்கள் தாக்கப்படுவது போலவும், தமிழகத்தை விட்டு அவர்கள் கர்நாடகத்திற்கு ஓடுவது போலவும் ஒரு பொய்யான பிரச்சாரத்தைத் திட்டமிட்டுக் கர்நாடக அரசு செய்யத் தொடங்கியுள்ளது.

கர்நாடகத்தில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்ட அவலநிலை போல், தமிழகத்தில் வாழும் கன்னடர்கள் எவருக்கும் ஏற்படவில்லை. தமிழக அரசு

இந்தப் பிரச்சினை தொடங்கிய நாள் முதல் கன்னடர் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. தமிழக மக்கள் தங்களது உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அமைதி காத்து வருகின்றனர்.

தமிழகத்தில் வாழும் பல இலட்சம் கன்னடர்கள் இன்றும் பாதுகாப்பாக, எவ்வித அச்சமும் இன்றி, தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குத் தொடர்ந்து அரசும், தமிழக மக்களும் துணை நின்று எப்போதும் பாதுகாப்பு அளிப்பார்கள்.

நேற்று முன்தினம் டெல்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் அக்குழு கர்நாடக அரசிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் அமைதி காத்து இயல்பு நிலைக்குத் திரும்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டும், இப்பிரச்சினை குறித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு நிலை என்ன? கர்நாடகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை என்ன? என்பதை நாமும் அறிவோம், நாடும் அறியும். இதுவரை கர்நாடகத்திலிருந்து 87,813 தமிழர்களுக்கு மேலாக தமிழகத்திற்கு ஓடிவந்துள்ளனர். ஆனால், தமிழகத்திலிருந்து 380 கன்னடர்கள் மட்டுமே அச்சத்தின் காரணமாகக் கர்நாடகம் சென்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே தமிழகம் திரும்பி விட்டனர்.

இந்த உண்மை தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவிற்கு எப்படித் தெரியாமல் போனது என்பது வியப்பாக உள்ளது. இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ள உண்மை நிலையைப் பாராட்டக் கடமைப் பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டுக் குழு தனது பாராட்டைத் தெரிவிக்காவிட்டாலும், உண்மையை உணர மறுத்து தமிழகத்தை, கர்நாடகத்தோடு ஒப்பிட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் இந்தியத் திருநாட்டில் எந்தப் பகுதியிலும் குடியேறலாம். வாணிபம் செய்யலாம். வாழ்க்கை நடத்தலாம் என்று இந்திய அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளையே பறித்து அரசியல் சாசனச் சட்டத்தையே உடைத்தெறிந்துள்ள கர்நாடக மாநிலத்தையும், தற்போது அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தையும் சமமாக மதித்து எடைபோட்டுப் பார்க்க நினைக்கின்றனர் என்றால் அதனை என்னவென்று குறிப்பிடுவது?

இரு மாநில அரசிற்கும் தனது தீர்மானத்தின் மூலம் அறிவுரை வழங்கிய தேசிய ஒருமைப் பாட்டுக் குழுக் கூட்டம், கர்நாடகம் தேசிய ஒருமைப் பாட்டில் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளது என்பதையும், அதன் தற்போதைய நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, கர்நாடக மாநிலம் இந்தியாவுடன் தான் உள்ளதா என்பதையும் முதலில் உறுதி செய்யத் தவறிவிட்டது.

மேலும், 31.12.1991 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் காஷ்மீர் மற்றும் பஞ்சாப் நிலை குறித்து மட்டுமே விவாதம் நடைபெற இருப்பதாகக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டு எனக்கும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், கர்நாடகத் தமிழர்கள் தாக்கப்பட்டிருப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்க உள்ளனர் என்ற விவரம் எனக்குத் தெரிவித்திருந்தால், நான் நிச்சயமாக அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பேன்.



அஞ்சும் மனத்தவரும் - கொஞ்சம்
ஆண்மை தருமனப் பான்மை யடைந்திட
மஞ்சு விரட்டிடுவோம் - துஷ்ட
மாட்டையும் அடக்கும் தாட்டிகம் காட்டுவம்.
—நாமக்கல் கவிஞர்



தொடர்புடைய மாநிலத்திற்குக் கூட்ட விவாதப் பொருளைத் தெரிவிக்காமலும் அம்மாநிலத்தின் கருத்தைத் தெரிந்து கொள்ள விழையாமலும், ஒருதலைப்பட்சமாக ஒரு தீர்மானத்தை நிறை வேற்றிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் நடவடிக்கைகள் வருந்தத் தக்கது என நான் கருதுகிறேன். இந்த நிலையில் இன்று கர்நாடகத்தில் நிலவும் அசாதாரண நிலையை ஜனநாயகத்திலும் தேசிய ஒருமைப்பாட்டிலும் நம்பிக்கையுள்ள எந்த ஒரு மத்திய அரசும் அனுமதிக்காது.

இந்திய அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகளையே பறித்த கர்நாடக அரசின் மீது இதுவரை எந்தவிதப் பயனுள்ள நடவடிக்கைகளையும் தொடராத மத்திய அரசையும் என் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கடந்த 13.12.1991 அன்று கர்நாடக அரசு அறிவித்து நடத்திய முழு அடைப்பு, கர்நாடகத்தில் வாழும் தமிழர்களைப் பெரிதும் பாதித்தது. ஆனால், இன்று (2.1.1992) பாதிக்கப்பட்ட தமிழர்களின் பக்கமிருக்கும் நாம் நமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அமைதியான முறையில் இன்றைய முழு அடைப்பை நடத்திக் காட்டியுள்ளோம்.

தமிழகத்தில் முழு அடைப்பு என்று அறிவித்த உடனேயே கர்நாடக அரசு அறிவித்த முழு அடைப்பின்போது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையைப் போலவே தமிழகத்திலும் திட்டமிட்டு நடைபெறப் போகிறது என்று கர்நாடகத்தில் உள்ளவர்கள் எதிர்பார்த்தார்கள். இந்தக் கருத்தில்தான் முழு அடைப்பை ரத்து செய்ய வேண்டுமென்று கர்நாடகத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் முன்னாள் முதல் அமைச்சர்களும் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால், தமிழகத்தில் சுயகட்டுப்பாட்டிற்கு இந்தியாவிலேயே ஈடுஇணையில்லை என்பதை நிலைநாட்டிக் காட்ட வேண்டும் என்ற உறுதியுடன் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, முழு அடைப்பு நடைபெற்றே தீரும் என்று கூறினேன். நான் எண்ணியபடியே முழு அமைதி காத்து, எவ்வித வன்முறைக்கும் இடம் தராமல் வெற்றிகரமாக இந்த முழு அடைப்பைத் தமிழக மக்கள் நடத்திக் காட்டியதால் தமிழகத்தின் மதிப்பை வானளாவ இன்று உயர்த்தியிருக்கின்றார்கள்.

வன்முறை நிகழும் என்ற எதிர்பார்ப்பில் இன்று காலை முதல் மாலை வரை அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கர்நாடக அரசு அதிகாரிகள் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை பற்றி விசாரித்தபடியே இருந்தார்கள். எவ்வித வன்முறைச் சம்பவமும் நடைபெறவில்லை என்பதை அறிந்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்து போனார்கள்.

தமிழகத்தில் முழு அடைப்பு என்றாலே காட்டுத் தர்பார் கட்டவிழ்த்து விடப்படப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த கர்நாடக அரசியல் வாதிகள் இந்தியா முழுவதிலுமுள்ள அரசியல் விமர்சகர்கள், சில மத்திய அமைச்சர்கள், மத்திய அரசு அதிகாரிகள், அகில இந்திய நாளேடுகள் உட்பட இப்படித் தமிழகத்தைப் பற்றித்தவறான கணிப்புச் செய்த அனைவருமே ஏமாந்துபோனார்கள்.

தமிழரின் பண்பாடு எத்தகைய மகத்துவம் வாய்ந்தது என்பதை உலகிற்கு உணர்த்திக் காட்டிய தமிழக மக்களின் பொற்பாதங்களில் என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.'



# இன்பம் தழைத்திடுமே!

கவிஞர் சாமி பழனியப்பன்

வையம் வாழக் குறள்தந்த
வள்ளுவன் நமது முன்னவனாம்
தெய்வப் புலமை வள்ளுவனைத்
தினமும் போற்றித் தொழுதிடுவோம்!

உளநோய் தீர்க்கும் மருந்தாகி
உயர்வை வளர்க்கும் விருந்தாகுந்
தெளிதமிழ்க் குறளை நாம்கற்றுச்
சிறுமை நீங்கி வாழ்ந்திடுவோம்!

ஒட்டைச் சாண்மனம் உடையவனை
உலகின் மனிதன் எனமாற்றும்
ஏட்டைத் தந்தநம் வள்ளுவனை
இனிதே கற்றுத் தேர்ந்திடுவோம்!

சத்துப் பொருள்கள் பலகூட்டிச்
சமைத்த உணவாம் குறளமுதை
நித்தம் கற்றுத் தெளிந்திடுவோம்
நிறையுடைய யோராய் வாழ்ந்திடுவோம்!



உலகின் ஒருமை பேணிடவும்
ஒற்றுமை யாக வாழ்ந்திடவும்
நலங்கள் பலவும் பெற்றிடவும்
நாளும் திருக்குறள் கற்போமே!



அறம்பொருள் இன்பம் கூறுகிற
அறங்குறள் நமக்கு வழிகாட்டும்
பிறழா தவ்வழி நின்றிட்டால்
பேதையும் மேதை யாகிடுவான்!

வாழ்வே குறளுக் குரையானால்
வையகந் தன்னில் துன்பமில்லை
தாழ்வும் இல்லை; இறப்புமிலை
தரணியில் இன்பம் தழைத்திடுமே!



## தமிழ்நாடு அரசின் கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதி

கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு தமிழகத்திற்கு வந்திருக்கின்ற கர்நாடகத் தமிழர்களின் மறு வாழ்விற்காகவும், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவின்பேரில் தமிழக அரசு ஒரு நிதியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நிதிக்குத் தமிழில் 'தமிழ்நாடு அரசின் கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதி' என்றும், ஆங்கிலத்தில் 'Tamil Nadu Government Fund for Rehabilitation of Karnataka Tamils' என்றும் பெயரிடப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து ரூ.1,08,000 இந்த நிதிக்குக் கொடுத்து, நிதியினைத் துவக்கி வைத் துள்ளார்.

## காவிரி ஆலோசனைக் குழு

காவிரி ஆற்று நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழக அரசுக்கு ஆலோ சனைக் கூற 5 பேர் கொண்ட குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்துள் ளது. அதன் விவரம் வருமாறு:-

அந்தக் குழுவின் தலைவராகத் திரு. ஆர். திருமலை (ஓய்வு பெற்ற இ.ஆ.ப. அதிகாரி) நியமிக்கப் பட்டுள்ளார்.

அந்தக் குழுவின் அமைப்பாளர் ஆகப் பொதுப்பணித்துறை செய லாளர் திரு. சி. செல்லப்பன் இ.ஆ.ப., நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் குழுவின் உறுப்பினர் களாகக் 'காவிரி டெக்னிகல்' பிரி வுத் தலைவர் திரு. ஏ. மோகன கிருஷ்ணன், கோவையில உள்ள விவசாயிகள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ்.ஜெயராஜ் மற்றும் ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் திரு. எஸ். இராமச் சந்திரன் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

காவிரித் தண்ணீர்ப் பிரச்சினை யில் இப்போது எழுந்துள்ள சிக் கலில் தமிழக அரசுக்கு ஆலோசனை கூறுவதுடன், காவிரி நீர்ப்பாசன முறைகள் விவசாய வளர்ச்சிக்காக எப்படிப் பயன்படுத்துவத என்பது பற்றித் தமிழக அரசுக்கு இந்தக் குழு ஆலோசனை தெரிவிக்கும்.

## கர்நாடகத்திலிருந்து தமிழகம் வந்துள்ளவர்களின் எண்ணிக்கை

14.1.1992 வரை கர்நாடக மாநிலத்தி லிருந்து வன்முறை தாக்குதலுக்கு உள்ளாகி தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களுக்கு வந் துள்ள தமிழர்களின் எண்ணிக்கை மொத்தம் 1,04,693. அவ்வாறு வந்தவர்கள் மாவட்ட வாரியாக பின்வருமாறு:-

சென்னை 76, தென்னார்க்காடு 837, வட ஆர்க்காடு-அம்பேத்கர் 13,009, திருவண்ணாமலை-சம்புவராயர் 3,854, தர்மபுரி 21,596, சேலம் 11,857, பெரியார் 29,939, கோவை (நகரம்) 6,165, கோவை (ஊரகம்) 8,818, நீலகிரி 7,410, மதுரை (ஊரகம்) 1,132 ஆக மொத்தம் 1,04,693.



# சங்கப்புலவர் நினைவாக நினைவுத் தூண்

ஒக்கூர்........ பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் சிவகங்கைக்கும் திருக்கோட்டியூருக்கும் இடையில் உள்ள அழகிய சிற்றூர்'......... இந்தச் செம்மண் பூமியில்தான் சங்கப்புலவர்கள் மாசாத்தியார் - மாசாத்தனார் ஆகியோர் தோன்றி, தமிழுக்குப் புகழ் சேர்த்தார்கள்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' என்னும் நில எல்லை கடந்த தீந்தமிழ்த் தேருக்குச் சங்கப் புலவர்கள்தாம் அச்சாணி என்பதை அறிவோம்.

அகம்.....புறம்.... என இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துப் பாடிய தமிழ்ச்சான்றோர்களின் இலக்கிய வரிகள் உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறப்புவாய்ந்த சங்க கால உலகில், பாண்டிய நாட்டுப் பெண்பாற் புலவர்களில் ஒக்கூர் மாசாத்தியார் தலைசிறந்தவர்; இவர் மொத்தம் எட்டுப் பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் அகநானூற்றில் இரண்டும், புறநானூற்றில் ஒன்றும், குறுந்தொகையில் ஐந்தும் எனக் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் வாழ்ந்த ஆண்பாற் புலவர்களுக்கு இணையாகப் பெண்பாற் புலவர்களும் தமிழையும் தமிழர் வீரத்தையும், வளர்த்தார்கள் என்பதற்கு இவருடைய 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' எனத் தொடங்கும் புறப்பாடல் ஒன்றே சிறந்த சான்றாகும். அகத்திணைப் பாடல்களில் இவர் சிறந்த உவமைகளைக் கொண்டு பாடியுள்ளார். சான்றாக - 'முல்லை அரும்பியிருத் தலைக் காட்டுப்பூனை சிரித்தாற் போல்' என்று ஒப்பிடுவதைக் குறிப்பிடலாம். குறுந்தொகையில் இவர் பாடல்கள் பெரும்பான்மை முல்லைத் திணைப் பாடல்கள் ஆகும்.

ஒக்கூர் மாசாத்தியாரின் பிறப்பிடமான அதே ஒக்கூரில்தான் சங்ககாலப் புலவர் ஒக்கூர் மாசாத்தனாரும் பிறந்தார். சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும், அகநானூற்றில் ஒன்றும் உள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்கப்புலவர்களின் மாப்புகழைப் போற்றும் வகையில் ஒக்கூரில் தமிழக அரசு நினைவுத்தூண் நிறுவியுள்ளது. இதன் திறப்புவிழா ஒக்கூரில் 10.12.91 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இச்சீரிய விழாவிற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. குத்சியாகாந்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். விழாவிற்கு வருகை தந்தோரைத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் பேராசிரியர் கு. சிவஞானம் வரவேற்றார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் நினைவுத்தூண் திறந்து வைத்து, இலக்கியச் சிறப்புரை ஆற்றினார். விழாவில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் திரு. கரு. முருகானந்தம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி உரையாற்றினார். தமது தலைமையுரையில் உரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. குத்சியாகாந்தி, இ.ஆ.ப., அவர்கள் 'ஒக்கூரில் உள்ள ஊராட்சி மன்றக் கட்டட அலுவலகத்திற்கு 'மாசாத்தியார் மாளிகை' எனப் பெயர் சூட்டி விழாவிற்குப் புகழ் சேர்த்தார். விழாவில் தமிழ்ப் பண்பாட்டுத் துறைத் துணை இயக்குநர் முனைவர். த. பெரியாண்டவன் நன்றி கூறினார். அறிவொளி இயக்கக் கலை நிகழ்ச்சி நடந்தது.

எண்ணுதலும், எழுதுதலும் தமிழிலேயே இருத்தல் வேண்டும் என நடைமுறைப்படுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசில் - சங்கப்புலவர் புகழ்பாடி நினைவுத்தூண் அமைத்துப் போற்றுவது வியப்பிற்குரியதல்ல! அவர்தம் ஆட்சியில் மேலும் சங்கத் தமிழ் வளர்ப்போம்! ஒக்கூர் மாசாத்தியார்-மாசாத்தனார் புகழ் ஓங்குக!

- ரெ. இராவணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன்
முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.

> தமிழின் தலைசிறந்த இலக்கிய ஏடு, உலகின் ஒப்புயர்வற்ற தனிமுதல் ஒழுக்க நூல் என்ற புகழைத் திருக்குறள் பெற்றுள்ளது.
>
> —பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்.



# அரசு ஊழியர்களுக்குப் பொங்கல் பரிசு

மத்திய அரசு போனஸ் வழங்கும் முறையைப் பின்பற்றி ஊதிய விகிதங்களில் ரூ.2,500, அதற்குக் குறைவாக மாத ஊதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு 16 நாட்கள் ஊதியம் போனசாக வழங்கப்படும். இதனால் ஊழியர்களுக்குக் குறைந்த பட்சப் போனசாக ரூ.604 கிடைக்கும். இது கடந்த ஆண்டைவிட ரூ.86 அதிகமாகும். அதிகப்பட்சமாக ரூ.2,500 ஊதியம் பெறும் அலுவலர்களுக்குப் போனஸ் வழங்கும் முறையில் ரூ.1,600 என்ற அளவில் தொடர்ந்து கணக்கிடப்பட்டு நிர்ணயிக்கப்படும். இந்த அதிகப்பட்ச அளவில் இம்முறை ரூ.853 போனசாக வழங்கப்படும். இது கடந்த ஆண்டைவிட ரூ.53 அதிகமாகும்.

ஊதிய விகிதங்களில் ரூ.2,500-க்கு மேல் ஊதியம் பெறும் அலுவலர்கள், அதாவது மாநிலமைய அரசு ஊதிய விகிதம், பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதம் போன்ற அலுவலர்களுக்குச் சிறப்புப் போனசாக ரூ.475 வழங்கப்படும்.

சில்லரைச் செலவினத்திலிருந்து நிலையான மாதாந்திர ஊதியம் பெறும் பகுதி நேர முழு நேரப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறும் பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள் கிராமப் பணியாளர் அமைப்பில் உள்ள அலுவலர்கள் மற்றும் ஆண்டொன்றுக்கு 240 நாட்களுக்குக் குறையாமல் தினக் கூலியாகப் பணியாற்றும் பணியாளர்களுக்கும் சிறப்புப் போனசாக ரூ.475 வழங்கப்படும்.

கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்த போதிலும் ரூ.72.17 கோடி செலவில் சுமார் 11 இலட்சம் அரசு மற்றும் உள்ளாட்சி அலுவலர்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

அரசு, தனியார் உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிறுவன அனைத்து ஓய்வூதியதாரார்கள்-குடும்ப ஓய்வூதிய தாரர்களுக்கு 1992-ஆம் ஆண்டுக்கான பொங்கல் பரிசாக ரூ.100-ஐ மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். இதனால் 2.30 இலட்சம் ஓய்வூதிய தாரர்கள் பயனடைவார்கள், அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.2.3 கோடி ஆகும்.

## திருக்கோயில் பணியாளர்களுக்கு கருணைத்தொகை

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரின்கீழ் திருக்கோயில்களில் பணிபுரியும், முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.350-ம், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.300-ம், 1992-ஆம் ஆண்டிற்குக் கருணைத் தொகையாக வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## சென்னைத் தரமணியில் நிரந்தர வர்த்தகப் பொருட்காட்சி

சென்னைத் தரமணியில் நிரந்தர வர்த்தகப் பொருட்காட்சியில் பிரபல தொழிலதிபர்கள் பங்கு பெறுவது தொடர்பாக 6.1.92 அன்று தென்னகத்திலுள்ள பிரபல தொழிலதிபர்களின் கூட்டத்தைத் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் கூட்டினார். அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. மூஸா ராஜா (Chairman and Managing Director of Trade Fair Authority of India)

அவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். கீழ்க்கண்ட தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்பட 21 தொழிலதிபர்கள் இக்கூட்டத்தில் பங்கு கொண்டார்கள்.

1. வீல்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை.
2. மங்களூர் கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைஸர்ஸ் லிமிடெட், பெங்களூர்.
3. விசாகப்பட்டினம் இரும்புத் தொழிற்சாலை, விசாகப்பட்டினம்.
4. டியூப்ஸ் இந்தியா குரூப்ஸ் மற்றும் ஆல் இந்தியா லெதர் டிரேட் அசோசியேஷன்ஸ்.



# உறுதி பிறந்தது!

கவிஞர் பூ.வி.கிரி

சமுதாய வீதியிலே
சத்தியத்தேர் ஓட்டவும்,
சமமாக எல்லாரும்
சேர்ந்திசை பாடவும்,
அமுதான தமிழ்ப்பெருமை
அனைத்துலகு எட்டவும்,
நமக்கெல்லாம் உரமேற்ற
நன்னாளும் வந்ததே!

வன்முறைப் பேய்களின்
வாலை நறுக்கவும்,
நன்முறை நாயகர்க்கு
நல்வாழ்த்துக் கூறவும்,
தன்னலக் கூட்டங்கள்
தலைதெறிக்க ஓடவும்,
பொன்னாளாய்ப் புலர்ந்ததே
பொங்கலெனும் திருநாளே!

கல்லாதார் இல்லாத
காலம் கனியவும்,
இல்லாதார் மகிழ்ந்திட
எல்லாமும் கிடைக்கவும்,
சொல்லாமல் செய்திடும்
செயல்வீரர் பெருகவும்,
எல்லார்க்கும் வந்ததே
இன்சுவைப் பொங்கலே!

கன்னியரை விலைபேசும்
காமுகர் குறையவும்
அன்னியரை வரவிடாத
ஆண்மை பெருகவும்,
என்னருமைப் பொன்னாடு
ஏற்றம் பெற்றிடவும்,
என்னுள்ளே உறுதிமொழி
இந்நாளில் பிறந்ததுவே!

## மதுவின் தீமைகளை விளக்கும் திரைப்படம், மற்றும் நாடகம் தயாரிக்க மாண்புமிகு முதல்வர் உத்தரவு:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக் கூட்டத்தில் மதுவின் தீமைகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வதற்காகத் திரைப்படம் ஒன்றும், நாடகம் ஒன்றும் தயாரிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் மதுவின் தீமைகளை விளக்கும் பிரச்சாரத் திரைப்படம் ஒன்றும், நாடகம் ஒன்றும் உள்துறையின் ஒத்துழைப்போடு, செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் விரைவில் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திரைப்படம் ஒரு மணி நேரம் முதல் ஒன்றரை மணி நேரம் வரை ஓடும் கால அளவு உள்ளதாகவும், நாடகம் இரண்டு மணி நேரம் நடைபெறக் கூடியதாகவும் இருக்கும். இவைகளைத் தயாரிக்கும் முழுச் செலவினையும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும். திரைப்படம் தயாரிக்கும் பொறுப்பு மாநில மது விலக்குப் பிரச்சாரக் குழுவின் உறுப்பினரும், பிரபல திரைப்படத் தயாரிப்பாளரும் ஆன திரு. ஜி. வெங்கடேஷ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாடகம் தயாரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் செயலரும் நாடகக் காவலர் என்று போற்றப்படுபவரும் ஆகிய திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படம், மற்றும் நாடகம் மூலமாக மதுவின் தீமைகளை தமிழகம் முழுவதும் மக்களிடையே தீவிரமாகப் பிரச்சாரம் செய்யத்தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

## பார்த்தோம் - படித்தோம்

பொதுவாக அரசியல், மருத்துவம், கல்வி, கவிதை, பொது அறிவு போன்றவைகளை அறிந்து கொள்ள ''தமிழரசு'' இதழ் மக்களுக்கு இன்றியமையாத ஒரு கருவூலம் என்றால் அது மிகையல்ல!

—ப. அருணாசல சண்முகம்,
களம்பூர்,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

இலக்கிய விருந்தாக 'ஞானம்' என்ற தலைப்பில் வந்த டாக்டர். அரங்க இராமலிங்கம் அவர்களின் அரிய கட்டுரையைப் படித்துப்பரமானந்தம் அடைந்தேன். மூர்த்தி சிறியதாக இருந்தாலும் கீர்த்தி பெரியது என்பது போல, இச்சிறிய கட்டுரை பெரிய ஞானப் பெட்டக மாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு இதழிலும் இது போன்ற கட்டுரையை வெளியிட வேண்டுகிறேன்.

—ந. பாலு
தெள்ளாறு,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

''யான் எனது எனும் செருக்கு'' அற 'ஞானம்' எனும் இலக்கிய விருந்து கட்டுரை மூலம் தெரிந்து கொண்டேன்.

—இன்பவல்லியன்,
கீரைசாத்து.

குடும்ப அட்டை வினாத்தாள் குறித்து அரசின் விளக்கம், பொதுமக்களுக்கு உதவிகரமாக இருந்தது, தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டம் பயன்படும் படியாக இருந்தது. மருத்துவக் கட்டுரை-இரத்தக்கொதிப்பு-சிறப்பாக இருந்தது. தொடரட்டும்!

—அ.கந்தசுவாமி
திருப்பூர்
(கோவை மாவட்டம்)

மருத்துவக் கட்டுரை ''இரத்தக் கொதிப்பு'' தெளிவாகவும், எளிதில் புரியும்படியாகவும் இருந்தது. இது போன்ற மருத்துவக் கட்டுரை ஒவ்வொரு இதழிலும் வெளிவந்தால் பொது மக்களுக்கு மிகவும் பயன்படும்.

—கே.அனந்தநாராயணன்,
கன்னியாகுமரி

''கல்லும் சொல்லாதோ'' கதையில் ம.காந்தியவர்கள் கடலூர் அருங்காட்சியகத்தின் அருமை பெருமைகளைக் கூறியிருந்தார். கட்டுரையைப் படித்து முடித்ததும் அருங்காட்சியகத்திற்கு வாசகர்கள் அனைவரும் சென்று வந்தது போலொரு பிரமையே ஏற்பட்டது.

—அரிமா பூமாளம்
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி, (கோவை மாவட்டம்)

''கல்லும் சொல்லாதோ கதை'' கட்டுரை படித்தேன். பல அரிய செய்திகளைத் தெரிந்து கொண்டேன்.

—எஸ். பிரபாகரன்,
மேல்பாலானந்தால்,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

புலவர் க. அண்ணாமலை எழுதிய 'மரம் வளர்ப்போம்!' கவிதை அருமையாக இருந்தது.

—ராசியில்லாத ரகு
பள்ளிச்சேரி,
(தென்னார்க்காடு மாவட்டம்)

''கவிஞர் பா.திருநாவுக்கரசின் ''கல்விச் செல்வம்'' கவிதைப் படைப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

—கெ. குமாரப்பிள்ளை
கன்னியாகுமரி.



# மூதறிஞர் இராஜாஜி 113-வது பிறந்த நாள் விழா

**த**மிழ்நாடு அரசின் சார்பில் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 113-வது பிறந்த நாள் விழா தரும புரி மாவட்டத்தில் அவர் பிறந்த ஊரான தொரப்பள்ளியில் 10.12.91 அன்று சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'மூதறிஞர் இராஜாஜி அவர்களின் இலட்சியங்களைத் தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்' என்றார்.

அவர் மேலும் பேசுகையில், ஓசூர் நகரில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 18,000 வீடுகள் கட்டப்படும் என்றும், குறிப்பிட்டார். மேலும் இந்நிகழ்ச்சியில் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 103 பேருக்கு ரூ.5.31 இலட்சம் கடன் உதவியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மு. தம்பித்துரை அவர்கள் இராஜாஜியின் ராஜதந்திரம், நிர்வாகத் திறன் ஆகியவற்றை நினைவுகூர்ந்து பேசினார். மேலும் விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., தலைமை உரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.ஏ. மனோகரன், திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. முனிவெங்கடப்பன், திரு. எம்.ஜி. சேகர், திரு. கே. சிங்காரம், திரு. எம். வெங்கட்ராமரெட்டி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். விழாவில் செய்தி- மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் வரவேற்றுப் பேசினார். செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மு. கிருஷ்ணன் நன்றி கூறினார்.

விழாவிற்கு முன்னதாக தேசிய மாணவர் படை மற்றும் சாரண இயக்கத்தைச் சார்ந்த 200 பேர் சைக்கிள் பேரணியாக ஓசூரிலிருந்து மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்த ஊரான தொரப்பள்ளிக்கு ஊர்வலமாக வந்து சேர்ந்தனர். மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாளையொட்டி, 10.12.91 அன்று காலை ஓசூர் நகரில் முக்கிய வீதிகள் வழியாகப் பள்ளி மாணவ, மாணவியர்கள், தேசிய மாணவர் படை, சாரணர் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் உட்பட சுமார் 5 ஆயிரம் பேர் ஊர்வலமாக வந்தனர்.

மேலும், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நினைவு இல்லத்தைப் பார்வையிட்டு, அங்குள்ள இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்தார்.

**மு. கிருஷ்ணன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்.


## சோமசுந்தரம் ஸூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ்
## (தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் அலகு)
## முத்தனேந்தல் 623 602

**போன்: 65 மானாமதுரை** **தந்தி: ஸூப்பர்ஸ்பின்ஸ்**

**எங்களது ஆலையில் கீழ்க்கண்ட தரமான நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.**

**சிட்ட நூல்: 10,20,40ஸ்**

**கோன் நூல்: 10, 20ஸ், 34ஸ், 40ஸ்**

**முறுக்கு நூல்: 2/17ஸ், 2/40ஸ்**

**தங்களது தேவைக்கு எங்களை அணுகுங்கள்**

மு. சுப்பிரமணியன்
பொது மேலாளர்



# தனிச்சிறப்பு வாய்ந்த நடுகல்

திருச்சி-மதுரை நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இனாம்குளத்தூரைச் சார்ந்த வட சேரி ஏரியின் அருகில் மிக முக்கிய நடு கல்லொன்றினைத் தமிழ் நாடரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது.

ஆநிரைகளின் பின்பு ஓடிச் சென்று இறந்த இடம் என்பது பொருள். பகைவர்களால் கவர்ந்து செல்லப் பட்ட ஆநிரைகளை மீட்கச் சென்ற போது பகைவர்களால் தாக்கப்பட்டு இவ்வீரன் இறந்திருக்கலாம்.


நடன. காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை


நீள் செவ்வக அமைப்பிலான இந்நடுகல்லில் வீரனொருவன், வலக்கரத்தில் கத்தியும், இடக்கரத் தில் வில்லும் பிடித்த நிலையில், புடைப்புச் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளான். வீரனுக்கு வலப்புறம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எழுத்தமைதியில் கல்வெட்டு பொறிக்கப் பெற்றுள்ளது.

''ஸ்ரீ கொற்றம் பூதி நிரை பின் போடி பட்ட இடம்'' என்பது கல்வெட்டு வரி

கொற்றம் பூதியெனும் வீரன்

தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, திருவண்ணாமலை சம்புவராயர், தருமபுரி மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் ஏறக்குறைய 500 நடுகற்களை இது வரை கண்டறிந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவில் தான் கிடைத்துள்ளன. அவற்றுள் இந்நடுகல் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. கி.பி. 9-10-ஆம் நூற் றாண்டளவில் கோனாட்டினை ஆண்ட இருக்குவேளிர் குலத்தைச் சார்ந்த வீரனொருவனின் வீரத்தைக் காட்டும் கல்லிது. இருக்குவேளிர் களின் தலைநகரான கொடும் பாளூர், இவ்வடசேரிக்கு அரு கிலேயே உள்ளது. இவ்வீரன் கொடும்பாளூர் படைகளைச்சார்ந்த வனாக இருப்பானாயின் இக்கல் வெட்டு மிகவும் மதிப்பு வாய்ந்த தாகிறது.

ஆநிரை மீட்கும் போரில் ஈடு பட்டு இறந்த அந்த இடத்திலேயே இக்கல் நடப்பட்டிருப்பதும் மற் றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்துறை இனாம்குளத்தூரில் மேலும் மூன்று கல்வெட்டுக்களை யும் கண்டறிந்துள்ளது. நடுவில் காளையும், சுற்றிலும் தாமரை மலரமைப்பினையும் மேற்பகுதியில் பெற்றுள்ள தூண்கள் வடிவில் அமைந்த இக்கற்களில் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எழுத்தமைதியில் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை சிலருக்கு ஏற்பட்ட தீராத நோய் தீரும் பொருட்டு இறைவனை வேண்டிக் கொள்ளும் வகையில் நாட்டப்பட்ட கற்களாகத் தெரிய வருகின்றன.

வடசேரியைச் சேர்ந்த திரு. எம்.குப்புசாமி மற்றும்இனாம்குளத் தூரைச் சேர்ந்த திரு. எம்.ஏ. பொன்னுசாமி ஆகியோர் கொடுத்த தகவலின் பேரில் மேற்காணும் கல்வெட்டுக்களை இத்துறையின் திருச்சிப் பதிவு அலுவலர் திரு. ஸ்ரீதரன் மற்றும் இளநிலைக் கல் வெட்டாய்வாளர் திரு. ஜெயராமன் ஆகியோர் கண்டுபிடித்துள்ளனர்.

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

ஒரு கோடியே இருபது இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் களுக்கு, இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழுப்புரத்தில் தொடங்கி வைத்தார் (7.1.'92).

**இரண்டாம் அட்டை:**

பொங்கல் திருநாளைச் சித்திரிக்கும், நம் ஓவியரின் கைவண்ணம்.

**நான்காம் அட்டை:**

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-1992 - மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார் (6.1.'92).


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

## எளிமையானவை! நேர்த்தியானவை!
## மேன்மை மிகுந்தவை!
## தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.


தமிழரசு
Licence No. TN/MS(C)/PP 23